திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9 30—9—55 : வெள்ளி : : விலை 3 அணா மலர் : 7

சென்னை சர்க்கார் பிடிவாதம்!

ஆளவந்தார்களே இந்த "வாதத்தை" நேரு சர்க்காரிடம் காட்டுவது தானே?

வெள்ளையர் பிடிப்பில் நம்நாடு சிக்கியிருந்தபோது, அவ்வாட்சியினர் மக்கள்மீது திணித்துவந்த வரிச்சுமையைப்பற்றி தங்களின் வாய் கிழியுமளவிற்குக் கண்டித்துப் பேசினர் தேசியத் தலைவர்கள்!

எங்கள் ஆட்சியில் வரிகளை எவ்வளவு குறைக்க முடியுமோ அந்த அளவுக்குக் குறைப்போம் என்றும், இன்னும் சமயம் வாய்த்தால் வரிகளையே ரத்து செய்துவிடுவோம் என்றும் பேசினர், ஏட்டில் எழுதினர், மாநாடுகளில் உறுதியும் தெரிவித்தனர். ஆனால் கடந்த எட்டு ஆண்டு சுயராஜ்ய குடியரசு ஆட்சியில் வெள்ளையர் திணித்த வரிச்சுமையே மேல் என்று கூறுமளவிற்கு இன்றைய குடியரசு ஆட்சியினரின் போக்கு தலைவிரித்தாடுகிறது.

இன்றும் சொல்லப் போனால், அன்று எதிர்க் கட்சியினர் வரிக் கொடுமைகளை எதிர்த்து ஏதாகிலும் திருத்தங்கள்கொண்டு போனால் அவைகளில் கூடுமானவரை இரண்டொன்றையாகிலும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். ஓரளவு விட்டுக் கொடுத்துமிருக்கின்றனர். அந்தச் சாதாரண பண்பாகிலும் இன்றைய ஆளும் வர்க்கத்தினரிடம் இருக்கிறதா என்பது ஐயப்பாட்டிற்குரியதாயிருக்கிறது. இதனால் வெள்ளையர் ஆட்சிமுறைக்கு நாம் "சர்டிபிகேட்" கொடுப்பதாக எவரும் கருதிவிடக் கூடாது.

வெள்ளையர் ஆட்சியை மிஞ்சும் அளவுக்கு ஏழை நடுத்தர மக்கள் மீது வரிப் பளுவை அடுக்குவதில் சர்க்கார் நிபுணர்களாகயிருக்கின்றனர் யென்பதை எடுத்துக் காட்டவே இதனை வரைகின்றோம்.

மற்ற நாடுகளை விட இந்தியாவில்தான் வரிச்சுமை அதிகம் என்று உலக நாடுகளில் பவனி வந்து திரும்பி வரும் நம் நாட்டு நிபுணர்கள் கூறுகின்றனர். இந் நிலையில் மேலும் மேலும் வரியை உயர்த்துவது விவேகமான செயலா என்பதைப் பற்றி மத்திய சர்க்காரும் அதன் பிடிப்பில் சிக்கியுள்ள மாநில சர்க்கார்களும் சிந்திப்பதில்லை.

அதிலும் இந்தியத் துணைக் கண்டத்தில் தொழில் — பொருளாதாரத் துறைகளில் மிகவும் தாழ்ந்துள்ள சென்னை மாநில மக்களை வரிக் கொடுமைகளுக்கு ஆளாக்குவது நேர்மையாகா தென்பதை ஆளவந்தார்கள் உணர்ந்தார்களில்லை.

மக்கள் மட்டும் சர்க்காரிடம் தங்கள் வசதிகளை வலியுறுத்தினால் அதனை நிறைவேற்ற நிதியில்லாமல் சர்க்கார்தான் என்ன செய்ய முடியும் என்று சென்னை வரி மந்திரி அங்கலாய்த்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

வரியின் மூலம் திரட்டும் நிதியில்லாது எந்த சர்க்காரும் ஆட்சி செய்ய முடியாதென்பதை அரசியலில் அரிச்சுவடி பாடம் படிக்கிறவர்கள் கூட அறிந்ததேயாகும். ஆனால் நம் மாநில மக்கள் வரி மட்டுமா கொடுத்து வருகின்றனர். வரிக் கொடுமைகளையும்தாங்கி அவதியுறுகின்றனர். எனவே வரி கொடுக்காமல் வசதிகளை மட்டும் எதிர்பார்க்கலாமா என்று பேசுவதினால் பிரச்னைகள் தீர்ந்துவிட்டதாகக் கருதுவது பைத்தியக்காரத்தனத்துக்கே ஒப்பாகும்.

சென்னை அரசியலாரின் (பட்ஜெட் கூட்டத்தில்) வரவு—செலவுகணக்கில் ஏறத்தாழ 3 கோடி ரூபாய் துண்டு விழுவதாக

நக்கீரன்

வும் அதனைச் சரிக்கட்ட சில வரிகளை விதிக்கப் போவதாகவும் கூறப்பட்டது. அவைகளில் ஒன்றுதான் நிலவரி சர்சார்ஜ்!

எனினும் வரவு—செலவு கூட்டத்தின் போதே சில உறுப்பினர்கள் இந்த யோசனையைக் கண்டித்துப் பேசி யிருக்கின்றனர்.

இறுதியாக இப்போது நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில் நிலவரி சர்சார்ஜ் சட்டத்தை ஆளும் வர்க்கத்தினர் தங்களுக்குள்ள ஓட்டு பலத்தைக் (உறுப்பினர்களின் எண்ணிக்கை) காட்டி நிறைவேற்றி விட்டனர்.

எதிர்க்கட்சியினர் (கம்யூனிஸ்ட்—திராவிட பார்லிமெண்டரி கட்சி, சோஷலிஸ்ட், தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் உள்ளிட்ட) அனைவரும் எவ்வளவோ வேண்டியும் மிகச் சாதாரண திருத்தங்களைக்கூட— அதாவது இந்த வரி நிரந்தரமாக யில்லாமல் இரண்டு ஆண்டுகள் மட்டுமே அமலில் இருக்க வேண்டுமென்ற எதிர்க் கட்சியினரின் திருத்தங்கள் அனைத்தும் நிராகரிக்கப் பட்டு அசல் மசோதா நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

இப்போக்கினைக் கண்டிக்கும் வகையில் சட்டசபையிலிருந்து எதிர்க் கட்சியினர் வெளியேறவும் செய்தனர்.

சென்னை சர்க்காரின் பொருளாதாரத்தில் பள்ளம் விழுகிறதென்றால், அதற்காக ஏற்கனவே அவல நிலையில் தத்தளித்து வரும் விவசாயிகளின் மீது வரிப்பளுவைச் சுமத்துவதைவிட ஆண்டுதோறும் சென்னை மாநிலத்திலிருந்து, மத்திய சர்க்கார் வசூலித்துச் செல்லும் பெரும் வரி நிதியிலிருந்து இரண்டு கோடி ரூபாய் கடனாகவாவது பெற்று ஆவன செய்யக் கூடாதா யென்று கேட்கிறோம்.

ஐந்தாண்டுத் திட்டங்களின் பெயரால் தான் நம்மாநிலம்புறக்கணிக்கப்படுகிறதென்றால் இவ்வித சந்தர்ப்பங்களிலாவது உதவியாகவோ அன்றி கடனாகவோ மத்திய சர்க்கார் ஆவன செய்யும்படி சென்னை மாநில சர்க்கார் வற்புறுத்த வேண்டாமா?

அதற்கு ஆற்றல் இல்லையெனில் ஊருக்கிளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பது போல ஏழை—நடுத்தர மக்கள் இன்னும் எவ்வளவுதான் தொல்லையை அனுபவிப்பது என்று கேட்கிறோம்.

சென்னை மக்கள் ஆண்டுதோறும் ஏறத்தாழ நூறு கோடி ரூபாய்வரை வரிகளை அள்ளிக் கொடுத்து வருகின்றனர். எனினும் சென்னை சர்க்காருக்கு பணப்பஞ்சமாம்! வசூலாகும் வரிப்பணம் இந்த சர்க்காருக்கே உரித்தானதா யிருந்தால் வரிக் கொடுமை இவ்விதம் வளர்ந்துகொண்டே போகவேண்டிய அநீதி தலைவிரித்தாட முடியுமா?

அனைத்திந்தியா என்ற பேரால் சென்னை மாநிலத்தின் நிரந்தரமான—மிகப் பெரிய வரிகள் எல்லாம் டெல்லி தர்பாருக்குச் செல்வதும், இங்குள்ள குட்டி தர்பார் சுந்தரர்கள் தங்கள் செலவுக்கு ஏழை மக்கள் மீது வரிப் பளுவைச் சுமத்தி தொல்லைக்காளாக்குவதும் நேர்மையாகுமா?

சென்னை மாநிலத்தை ஆளும் அமைச்சர்களுக்கு இதைப் பற்றிக் கவலையில்லாவிட்டாலும் வரிக் கொடுமையால் அவதியுறும் ஏழை—நடுத்தர மக்கள், அக்கொடுமையிலிருந்து விடுபட வழி என்ன என்பதை இனியாகிலும் சிந்திக்க வேண்டுகிறோம்,

அவ்விதம் சிந்திப்பார்களே யானால், நம் நாடு, அனைத்திந்தியா என்ற பேரால் இந்தியப் பேரரசுடன் பிணைக்கப்பட்டிருக்கும் அடிமைத் தனையைத் தகர்த்தெறிவது ஒன்றே சிறந்த வழி என்பதை அனைவரும் உணரக்கூடும்.

பஞ்சாபில் மூன்று நாட்கள்

சாது ஆசிரமம்

ஏன்! இச்சிற்றூற்றைக் கடக்க ஒரு வாராவதி கட்டக் கூடாதோ! போக்குவரத்துக்குச் சௌகரிய மாக இருக்குமே! என்று கேட்டுக் கொண்டே சைகிளைக் கையில் தூக்கிக் கொண்டேன்—நான்.

ஆமாம்! ஆமாம்! இந்த வாராவதிப் பிரச்னை எங்கள் சர்க்காருக்கும் எட்டிவிட்டது! இன்னும் கொஞ்ச காலத்திற்குள் கட்டி விடுவார்கள், என்று சொல்லிக்கொண்டே ஹேத்ராம் அவர்களும் அவரது சைகிளை தூக்கிக் கொண்டார்.

சளசள என்ற ஒலிகளினூடே, முழங்காலுக்கும் சற்றுத் தாழ்ந்த அந்த ஆற்றோட்டத்தைக் கடந்து அக்கரை ஏகினோம் நாங்கள் இருவரும்.

அதோ தெரிகிறதே வெளுப்பா—அது என்ன மேகக் கூட்டமா அல்லது மலையா!

அதுவா?...அதுதான் தர்மசாலா பனிமலை. அது இங்கிருந்து இருபது மைல் தூரத்திலிருக் கிறது. கடுங் குளிர் காலங்களில் பனிமலைச் சரிவுகள் நிகழும்! அதனால் எங்கள் பகுதிகளில் பனிமழையும் கொட்டும். அவ்வேளைகளில் நாங்கள் எல்லோரும் வீட்டிலேயே கம்பளி உடைகளில் புகுந்து கொண்டு தகதக்கும் அடுப்போரங்களில் குளிர் காய்வோம்.

அட! இந்த ரோடு, எங்கள் தமிழகத்தில் திருவாங்கூருக்கும் கன்னியாகுமரிக்கும் இடையிலுள்ள சிமெண்ட் ரோட்டைப்போல் மிகஅழகாக இருக்கே! இது என்ன ரோடு!

இது ஹோஷியார்பூரிலிருந்து ஊனா நகர் போகும் நெடுஞ்சாலை. போக்குவரத்தில் இது அதி முக்கியத்துவம் வாய்ந்த சாலையாதலால் அழகுடனும் அழுத்தமுடனும் விளங்குகிறது.

அதோ தெரிகிறதே அந்தக் கட்டிடம்!...சாது ஆசிரமம் தபால் நிலையம்!...கொஞ்சம் இருங்கள் இந்தக் கடிதத்தை அங்கே சேர்த்து விட்டு வருகிறேன்.

மிஸ்டர் திர்வேடம்! அதுதான் நம்ம பாபுஜீ கூறிய சாது ஆசிரமம்! அந்த ஆசிரமத்தின் பெயரைத் தாங்கியே அவ்வஞ்சல் நிலையம் விளங்குகிறது! அது இப்போதுதான் பணியாற்றத் துவங்கி யிருக்கிறது! இதற்கு முன்...

ஆம் ஹேத்ராம்ஜீ! நினைவுவருகிறது! இதற்கு முன்பெல்லாம் நான் சந்த்ராம்ஜீக்கு முகவரி எழுதும்போது பாஜ்வாடா அஞ்சல் என்றுதான் எழுதி வந்தேன். ஆனால் சமீப காலந்தொட்டு சாது ஆசிரமம் அஞ்சல் என்றுதான் எழுதிவருகிறேன்.

அந்த ஆசிரமத்தில்தான் தோழர் விஸ்வபந்து அவர்கள் அயராது பணியாற்றுகிறார். நல்ல மனிதர் அவர்.

ஆமாம்! ஆமாம்! அவரைப் பற்றிப் பாபுஜீகூட எனக்கு இதற்கு முன்பு பற்பல கடிதங்களின் வாயிலாக அறிவித்திருக்கிறார்.

அவர் சாது ஆசிரமத்தின் மேற்பார்வையாளர்' அவர் ஒரு சாஸ்திரி! M. A, M O. L. (Ph.)— O. d' A. (Fr.), Kt. C. T. (It.) என்ற பட்டங்களைப் பெற்றவர், அவர் அறுபது வயதைக் கடந்தவர். ஆனால் நித்ய பிரம்மச்சாரி! இலக்கியத்துறையில் நீங்காப்பற்று! அயரா உழைப்பு! அதில் கொள்ளை மகிழ்ச்சி பூண்டவர்! அப்படிப்பட்ட விஸ்வபந்து அவர்கள் நம் சந்த்ராம்ஜீயின் நெருங்கிய நண்பர். அவர் வேதங்களெல்லாம் தெய்வ வாக்கு என்பதை ஒப்ப மறுப்பவர்! அக்காலத்துப் புலமை வாய்ந்த மனிதர்களால் இயற்றப்பட்டவைகளே இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களும். அவைகளில் கூறப்பட்டிருக்கும், தெய்வக் கோட்பாடுகளும், மதகோட்பாடுகளும் எக்கேடு கெட்டாலும் கெட்டுப் போகட்டும்! ஆனால் அவைகளில் அடங்கிக் கிடக்கும் சமஸ்கிருத மொழி மேன்மையும், சொல்லின்பமும் அம்மொழியில் தேர்ந்தோருக்கே நனிவிளங்கும்! அவ்வகையில் விஸ்வபந்து, சமஸ்கிருத மொழியில் ஒரு மேதை!

எனவே அவர் அவ்வேதங்களைத் துருவித் துருவி சொல்நயம், பொருள் நயம், கலைநயங்களை பகுத்தெடுத்து தொகுக்கும் வேலையில் மூழ்கிக் கிடக்கிறார்.

அப்பணியேதான் அந்தச் சாது ஆசிரமத்தின் பணி. வேத களஞ்சியம் தயாரிக்கிறார்கள். (நமது சென்னை பல்கலைக்கழகம்—கலைக் களஞ்சியம் தமிழில் தயாரிப்பதுபோல)—அதற்கு பஞ்சாப் அரசாங்கத்தின் உதவியும் கிடைத்திருக்கிறது.

விஸ்வபந்து அவர்கள் சில அரிய பெரிய நூல்கள் இந்தியிலும் சமஸ்கிருதத்திலும் இயற்றியுள்ளார்.

ஹிந்தியில் 'விஸ்வஜோதி' என்ற மாத சஞ்சிகைக்கு ஆசிரியராக அமர்ந்து அதையும் நடத்தி வருகிறார்.

சாஸ்திரியாயிருந்தாலும், வேதங்களைக் கிளறிக் கொண்டிருந்தாலும், சாதி யென்றால் பிடிக்கவே பிடிக்காது. தீண்டாமை என்று கேட்டாலே அவருக்கு வேல் பாய்ச்சுவது போலத்தான். மக்களை திருத்தாத மதம் மாளட்டும்! ஒற்றுமையைப் போற்றாத மதம் ஓடிப்போகட்டும்!—என்று கூறுபவர்!

அடக்கமுடையவர்! தளும்பா நிறைகுடம்! ஆழ்ந்த சிந்தனையுடையவர்! அன்புடன் குழைபவர்! ஒழுக்க சீலர்! மாதிறந்தான்! ஒல்லியானவர்! வழுக்குத்தலை! வடநாட்டுத் திரு. வி. க, எனலாம். அவரது 'விஸ்வஜோதி' பத்திரிகைக்கு நம் சந்த்ராம் அவர்கள் துணைஆசிரியராக அமர்ந்து சாதியைத் தாக்கி, தீட்டித் தள்ளிக்கொண்டே இருக்கிறார் கட்டுரைமேல் கட்டுரையாக!

சந்த்ராம் எழுதிய பல புத்தகங்களை, விஸ்வபந்து அவர்கள் சாது பதிப்பக வாயிலாக வெளியிட்டிருக்கிறார். அவ்வாசிரமத்தில் ஒரு பெரிய அச்சகம் பணியாற்றுகிறது.

ஆக இவ்வளவும் அவரைப் பற்றி எனக்கும் சந்த்ராம் கூறியிருக்கிறார்! வாருங்கள் ஹேத்ராம்ஜீ! அவரைப் பார்த்துவிட்டுப் போவோம்—என்றேன். சம்மதித்தார்! இருவரும் உள்ளே போனோம்!

'திருவேடம்'

விஸ்வபந்து இருக்கும் அறையைக் காண்பித்துவிட்டு ஒதுங்கிக் கொண்டார் ஹேத்ராம்.

நல்ல மனிதர்தானே அவர்! தைரியமாக உள்ளே நுழைந்து Good Morning Sir! என்றேன்.

Hullo! என்று கைநீட்டி எனது கரம்பற்றி——கைகுலுக்கினோம்!

You are Mr. T......friend of our friend Shri Sant Ram Ji, —from Madras! You are quite welcome! I appreciate your boldness in undertaking this your Punjab tour, despite this inclement weather! For the single reason of paying a visit to your 'Pen Friend' Sant Ram Ji—now your 'Personal Friend' you come to Punjab. I admire your sincerity and earnestness! I heard much about you through Sant Ram Ji and wondered a lot about your talents in general and particularly in the journalistic field!—என்று கூறி என்னை வரவேற்றார் விஸ்வபந்து.

சென்னையில் தோழர் எஸ். ராமனுதன் அவர்கள் நடத்தும் 'இண்டியன் ரேஷனலிஸ்டு' என்னும் மாதப் பத்திரிகை சந்த்ராமிற்குப் போகிறது. அதை விஸ்வபந்து அவர்களும் வாசித்தல் வாடிக்கை. அப்பத்திரிகைப் படிப்பைக் கொண்டு என்னிடம் விஸ்வபந்து சொன்னார்:

உங்கள் ராமனுதன் கடவுளைக் கண்டபடி திட்டுகிறார்! தாங்கள் போய் அவரிடம் நான் சொன்னதாகச் சொல்லுங்கள். கடவுள் பரம சாது! அவரைத் திட்ட வேண்டாம்! இது விஸ்வபந்துவின் வேண்டுகோள், என்றார்.

நாங்கள் கடவுளைத் திட்டுவதில்லை. கல்லையும் மண்ணையும் சாணியையும் மற்றவைகளையும் காட்டி இதுதான் கடவுள் என்றுரைக்கும் பேதமையைத்தான் சாடுகிறோம் என்றேன்.

தாங்களும் 'நாத்திகம்' பேசுகிறீர்கள்! உங்கள் பெரியார் ஈ. வெ. ராமசாமியும், ராமனுதன் போன்றோர்களும் உங்களைப் போன்ற வாலிபர்களை நன்றாகத் தயார்படுத்தி வைத்திருக்கிறார்கள்! சென்னை மற்ற பகுதிகளைக் காட்டிலும் அலாதி அலாதிதான் என்றார் விஸ்வபந்து!

பிறகு ஒரு ஆளைத் தருவித்து ஒரு புத்தகத்தை எடுத்து வரச் சொல்லி அதை என்னிடம் கொடுத்தார்.

'ஹ-மா-ரா-ச-மா-ஜ்' என்று மெதுவாக எழுத்துக் கூட்டிப் படித்தேன்.

அடே! இந்தி படிக்கிறீர்களே! என்று ஆச்சர்யப்பட முற்படலானார் விஸ்வபந்து.

இல்லை! இல்லை! எழுத்துக்கள் மட்டும்தான் தெரியும் என்று அவர் ஆச்சரியத்தைக் குறைத்தேன்.

அந்த புத்தகத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டார்.

தெரியும்! அது சந்த்ராம் அவர்களின் உயிர் நாடி! உழைப்பின் பிறப்பு! அவர்களின் எண்ண எழுச்சி! சாதிக்கு சவக்குழி யெடுக்கும் வழிகாட்டி அப்புத்தகம்! 'விடுதலையில்' ஒரு அத்தியாயமே எழுதியிருக்கிறேன் என்றேன்.

அதற்குப் பரிசாகத் தான் போலும் இதை உங்களுக்குக் கொடுக்கச் சொன்னார் சந்த்ராம்ஜீ— பெற்றுக் கொள்ளுங்கள் என்றார் விஸ்வபந்து!

பெற்றுக்கொண்டேன்! மகிழ்ச்சி தெரிவித்தேன்.

அவரது ஆசிரமத்தைப்பற்றி விளக்கினார். அவரது வாழ்க்கையைச் சற்று ஓட்டி நோடிகாட்டினார். சந்த்ராமிடம் அவருக்குள்ள நட்பைக் காட்டினார். பிறகு ஆசிரமத்தை சுற்றிக்காட்டினார்.

அப்போது அங்கு கண்ட ஹேத்ராமைப் பார்த்து ஏன் உள்ளே வரக்கூடாது என்று உரிமையோடு 'கோபம்' காட்டினார், அவருடன் சற்று அளவளாவினார்.

நானும் ஹேத்ராமும் அவரிடமிருந்து விடை பெற்றுக்கொண்டோம்.

விஸ்வபந்துவின் பிந்திய சில நினைவுகளை இங்கே கூற விரும்புகிறேன்.

எனது தந்தை 1954-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 14-ம் நாள் இயற்கை எய்தினார். அத்துயரச் செய்தியை சந்த்ராம் மூலம் அறிந்த விஸ்வபந்து அவர்கள் கீழ்க்காணும் ஆறுதல் மொழிகளை எனக்கு ஊட்டித் தேற்றினார்.

Sadhu Ashram
21—7—1954

My dear Sri T,

I have every sympathy with you in the bereavement yon have suffered from the sad demise of your father. In sending you heart-felt Condolence on this occasion I pray you might be given enough of fortitude to stand this rude shock of nature.

Yours sincerely,
Vishva Bandu

அதுவுமன்றி சந்த்ராமைப் பார்த்துத் திரும்பிய பின்பு சந்த்ராமைப் பற்றி ஆங்கிலத்தில் கட்டுரை ஒன்றை 'இண்டியன் ரேஷனலிஸ்டு' பத்திரிகையில் எழுதினேன். அதைக் கண்ணுற்ற விஸ்வபந்து அவர்கள் கீழ்க்காணும் பாராட்டுரையை வழங்கி மகிழ்ந்தார்;

Yes, I have gone through your article on Shri Sant Ram Ji with great interest. Really you have done quite well...So far Shri Sant Ram is concerned he richly deserves all the reverence that you have shown to him and perhaps even much more than that.

நிற்க, சாது ஆசிரமத்தைவிட்டு நானும் ஹேத்ராமும் சைகிளில் ஏறினோம்!

ஹோஷியார்பூர் நோக்கினோம். சற்று நேரத்தில் ஹோஷியார்பூர் தக்கர்தாஸ் ஆபீஸ் வந்து சேர்ந்தோம்.

கோர்ட் நடக்கிறதே இப்போது உள்ளே நுழையலாமா என்று ஹேத்ராமைக் கேட்டேன்.

பரவாயில்லை நீங்கள் போய் அவர் பார்வையில் நில்லுங்கள் என்று கூறினார் ஹேத்ராம்.

அப்படியே அவர் பார்வை என்மீது விழும்படி நின்றேன்.

ஒரே குஷியான குரலிலே: ஹல்லோ!...திர்வேடம்! திர்வேடம்! திர்வேடம்!...கமான்!......கம்அப்!...Just uow we think about you! you are coming like an Angel!...என்று கூறிக்கொண்டே என்னைக் கையைப் பிடித்து மேடைமேல் ஏற்றி தமது பக்கத்தில் அமர்த்திக் கொண்டார் தக்கர்தாஸ்! அவர் எமது பெயரை மும்முறை உச்சரித்து விளிப்பதில் ஒரு அலாதி பிரியம்!

அப்போது இரு, வாதி, பிரதி வாதிகளை, இக்கூண்டிலும், அக்கூண்டிலுமாக நிறுத்தி வைத்து ஏதோ வாக்கு மூலங்களை பதிவு செய்து கொண்டிருந்தார். எல்லாம் உருது மொழியிலேயே நடைபெறுவதைக் கண்டேன்.

ஒரு சில நிமிடங்களுக் கெல்லாம் பிகாரிலால் அவர்களும் வந்து சேர்ந்து விட்டார்.

ஹல்லோ! திர்வேடம்! வீட்டிற்கு போகலாமா? என்றார் பிகாரிலால்.

பிகாரிலாலும் நானும் தக்கர்தாசிடம் விடை பெற்றுக் கொண்டு பிகாரிலால் இல்லம் நோக்கி நடை போட்டோம்.

என்னைக் கொண்டு வந்து சேர்த்த ஹேத்ராம் பிகாரிலாலிடமும் என்னிடமும் விடைபெற்றுக் கொண்டு ஹோஷியார்பூர் பஜார் சென்று விட்டார்.

இதுதான் தங்கள் இல்லமோ என்று கேட்டவாறே பிகாரிலால் இல்லம் புகுந்தேன்.

(பிற அடுத்து)

தீர்ப்புக் கூறுங்கள் தோழர்களே

சண்முகம் குலசேகரன்

வேண்டுவது எது ?

மதமா? மதியா?—உலகின் பல பாகங்களிலுள்ள அறிவுடையார்மாட்டு எழும்புகின்ற ஆராய்ச்சிக்குரிய ஒரு கேள்வி: கடந்த முப்பது நாற்பது ஆண்டுகளாகத் தோன்றியுள்ள விழிப்புணர்வு காரணமாக நமது திருவிடத்தின் மூலை முடுக்கெல்லாங் கூட தற்பொழுது வினப்படுகின்றது.

இந்தப் பரந்த உலகு தோன்றிய அந்த நாளிலேயே 'படைத்துக் காத்து அழிக்கின்ற' 'பஞ்ச' தொழில் நிபுணரான பரமனால் உண்டாக்கப்பட்டது எங்கள் இந்து மதம் என்று அந்த மதத்தைச் சொந்தமாகக் கொண்டவர்கள் கூறுகின்றார்கள்.

இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரத்தி ஐநூறு ஆண்டுகட்கு முன்னர், மடமைவழி மாற்றி கடவுள் பாதங் காண, கயாவில் ஞானம்பெற்ற சித்தார்த்தன் தோற்றுவித்த சிறந்த மதம் எங்கள் புத்த மதம் எனப் புகல்கின்றனர்.

பாவிகளை இரட்சிக்க பரமண்டலத்திலிருந்து அவதரித்த ஈசனின் மைந்தன் ஏசுவினால் ஏற்படுத்தப்பட்ட மாசற்ற மதமே எங்களது என்கின்றனர் கிறித்துவர்கள்.

ஆயிரத்து முன்னூற்று எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அல்லாவானவர் நபிகள் நாயகம் வாயிலாக எல்லா உலகினருக்கும் ஈந்த புதுமை மதமே எங்கள் இஸ்லாம் என்று இடம்புகின்றனர் இஸ்லாமியர்கள்.

இப்படியாக இன்னும் எத்தனையோ குட்டி மதங்களும் 'அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து நிற்கும்!' ஆண்டவன் பெயரால் ஆங்காங்கே நிலவி வந்தன—வருகின்றன.

அத்தனை மதங்களும் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகச் சாதித்தது என்ன? வெறித்தனம் நீக்கி விவேக புத்தியோடு எண்ணிப் பார்க்க வேண்டிய வினா இது.

உலகில் முதல் மனிதன் உற்பத்தியான நாள் முதல்,—காட்டு மிராண்டியாக, கல்லையும் கட்டையையும் ஆயுதமாகக் கொண்டு கண்ட கண்ட மிருகங்களை வேட்டையாடி, பச்சை மாமிசம் புசித்து மரத்தின் நிழலிலும் மலையின் குகையிலும், ஆடை ஏதுமின்றி அநாகரீகமாக, மாக்கள் போல வாழ்க்கை நடாத்தி வந்த நாளிலிருந்து, விஞ்ஞானத்தின் வெற்றியிலே வாழ்வு நடத்துகின்ற இந்த இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை மதமும் அதன் மார்க்கமும் சாதித்தது என்ன? செய்த நன்மை இம்மியளவாவது, உண்டா என்றால் ஆயிரம் தடவை அடித்துக் கூறலாம் இல்லை இல்லை என்று. ஆனால் அவைகள் போட்ட முட்டுக் கட்டைகள்.—அப்பப்பா!—கொஞ்ச நஞ்சமென்று மதப் பேய் ஏவிய எத்தனையோ இடையூறுகளையும், ஈட்டிப் பாய்ச்சல்களையும் கொலைப்பாதகக் கொடுமைகளையும் தாங்கித் தாங்கிதான் மனிதன் இன்றைய நிலையை அடைந்திருக்கிறான், தனது மதியின் வலிமைக் கேடயத்தின் துணைக்கொண்டு.

சைவ—வைணவச் சண்டைகளும் சமணர் படுகொலைச் சரிதைகளும், சிலுவைப் போரும், யூத—அராபிய யுத்தங்களும், நவகாளி நிகழ்ச்சிகளும் மதம் மக்களிடையே சாதித்த சாதனைகளுக்கு சரித்திர ஏடு காட்டும் சான்றுகளல்லவா! ஆதியிலிருந்து மனிதன் மதம் தொடுத்த கணைகளைத் தடுத்து எவ்வெவ்வாறு முன்னேறி யிருக்கிறான், தனது மதியது துணை கொண்டு என்பதைச் சிறிது ஆய்வோம்.

காடுகளில் குடிசைகளிலே முடங்கியிருந்த மக்கள் 'திடீர் திடீர்' என வேகமாக வீசிய புயலைக் கண்டு பயந்தனர். அவர்களது பயத்தைப் போக்கமுடியாத மதம் புயல் 'ஆண்டவனது' கோபத்தின் அறிகுறி என்றது. காட்டாறுகளையும் கடும் மழையையும் கண்டு கலங்கியவர்களுக்கும் 'அது கடவுளின் ஏவல்' என்று கூறிப் பூசை செய்யும்படி போதனை செய்தது. காற்றையும் நீரையும் 'ஹீரோ'க்களாகக் கொண்ட கடவுள் புராணங்களைச் சொல்லி மடமை வளர்ப்பதைக் கண்டு மனம் பொறாது சில மதியுடையார், காற்றும் மழையும் இயற்கையானவை; பூசை செய்வதாலோ பொங்கல் படைப்பதாலோ அவற்றைக் கட்டுப்படுத்த முடியாது என்று கூறி காட்டாற்றிலிருந்து தப்ப மேட்டு நிலங்களில் குடியேறுமாறு செய்து புயலின் கொடுமையைப் போக்கும் பாதுகாப்பு வழிகளையும் காட்டினர்.

அடிக்கடி ஏற்பட்ட காட்டுத் தீயையும் அதனால் உண்டான அழிவையும் தாங்க முடியாமல் ஐயோ ஆண்டவனே! என்று அக்கினித் தேவனை நோக்கி அலறினர், மதம் காட்டிய பாதையிலே! ஆடு மாடுகளையும், மான் முயல் முதலானவைகளையும் பலியிட்டுப் பகவானிடம் 'பாதுகாப்பு' கோரியிருக்கின்றனர். ஒரு நாள் அக்கூட்டத்தைச் சேர்ந்த சிந்தனையாளன் ஒருவன் வேட்டைக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பும் வழியில் அயர்வு காரணமாக ஓரிடத்தில் அமர்ந்திருந்தான். காற்று வீசிக் கொண்டிருந்தது. ஏதோ ஒரு குறிப்பிட்ட திக்கை நோக்கிக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான். இரண்டு மூங்கில் மரங்கள் காற்றின் வேகத்தில் ஆடி, ஒன்றின்மீதொன்று உராய்ந்த போது சிறிய சிறிய தீப்பொறிகள் பறப்பதைக் கண்டான், தன்னையறியாமல் ஆடினான். ஏதேதோ பாடினான், என்றுமில்லா ஆனந்தமுடன்.

இரண்டு மூங்கில் துண்டுகளை எடுத்துக் கொண்டு ஓடினான் தன் உறவினர் நோக்கி ஏ! மூடர்களே! அக்கினி தேவனாவது அடுப்பு சாம்பலாவது! இங்கே வாருங்கடா! இதைப் பாருங்கடா! என்று தன் கையிலிருந்த இரண்டு மூங்கில் கழிகளை உராய்ந்து காட்டினான். நெருப்புப் பொறிகள் பரவுவதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியமுற்றனர். மூங்கில் போன்ற மரங்கள் ஒன்றோடொன்று உராய்தலினால் ஏற்படுகின்ற தீ பட்ட மரங்களில் பற்றி எறிந்து காற்றின் துணை கொண்டு கானகமெங்கும் பரவுகிறது என்பதைத்தெளிவாக விளக்கிக் காட்டிய உண்மையை அக்கூட்டத்தார் உடனே ஏற்றுக் கொள்ளாத போதிலும் நாளடைவில் அறுசுவையுடன் உணவு சமைப்பதிலிருந்து அற்புதமான வேறு பல அலுவல்களுக்கும் 'அக்கினி தேவனை' வேலைக்காரனாகப் பயன் படுத்திக் கொள்ளுகின்ற சாதனை மதங்காட்டிய வழியினாலல்ல—மதியின் மார்க்கத்தினால்தான் என்பது தெளிவாகின்றதன்றோ.

மதவாதிகளுக்கு விரோதமாகப் பேசுகின்றவர்கள் சொல்லொணா வேதனைக்காளாகி யிருக்கின்றனர். ஆட்சி பீடங்களும் அதிகாரங்களும் மத ஆதிக்கங்களுக்கடங்கி யிருந்த காரணத்தால் அறிவுக்கதிரவனை உதிக்க விடாமல் தடுக்க ஆகாத காரியங்களெல்லாம் செய்து பார்த்தனர். முடிவு? மத முயற்சி வென்றது என்பதற்கு வரலாற்றில் ஆதாரமே கிடையாது மத பீடங்களில் பகையைத் தேடிக் கொண்ட எத்தனை எழுத்தாளர்களின் கட்டை விரல்கள் முறிக்கப்பட்டிருக்கின்றன தெரியுமா? எத்தனை அறிவுச் சிற்பிகள் எரிக்கப் பட்டிருக்கின்றார்கள், கணக்குண்டா? அப்பப்பா! கொடுமை—வெங்கொடுமை புரிந்திருக்கிறது வேதம்!

எல்லா மதங்களுமே உலகு தட்டையானது என்றே கருதி வந்தன. இந்து புராணம் இன்றுங் கூட உலகம் பாய்போன்றது என்றுதான் போதிக்கின்றது. ஒரு அறிவாளன் தனது ஆராய்ச்சியின் பயனாக உருண்டை வடிவமானது என்ற உண்மையை ஆதாரங்கள் பல காட்டி அறிவித்தான். அந்தக் கலிலியோவை பரமண்டலத்தின் 'கமிஷன்' ஏஜண்டுகளான பாதிரிமார்களும் அவர்களின் பாதந் தாங்கிகளும் சும்மாவிட்டார்களா? கல்லால் அடித்துத் துரத்தியதுமன்றி காராக் கிருகத்தில் பூட்டியும் கொடுமை புரிந்தனர். ஆனால் அவன் கூறிய அறிவுரை பொய்யாகிவிடவில்லை. அவனை வாட்டி வதக்கிய வேத 'ஸ்பீக்கர்கள்'தான் தலை வணங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவனுடைய ஆராய்ச்சித் திறன் கண்டு அறிவுலகம் பாராட்டியது

புது உலகம் என அமெரிக்காவை கண்டு பிடித்த கொலம்பஸ் கொஞ்ச துன்பமா அடைந்தார் அந்த நாட்டு மதத் தலைவர்களிடம்!

மலையிலே பெய்கின்ற மழை ஆறாகப் பெருக்கெடுத்து கடலில் சென்றடைவதுதான் கடவுளின் விதி, விதியை வெல்ல மனிதனால் முடியாது என்று வாதாடியது மதமும் அதன் மானேஜர்களும்! இதோ மதியின் வலிமையைக் காண் என்று ஆற்றைத் தடுத்து அணைகட்டி வேண்டியபோது வெளியிட்டு அதன் மூலம் மின்சாரம் பெறுவது மட்டுமின்றி நீரை வாய்க்கால் வழி கொணர்ந்து வரப்பு வழி செலுத்தி வயலில் பாய்ச்சி செல்வம் கொழிக்கும் சீமையாக நாட்டை ஆக்குகிறான் மனிதன்,

கடலிலே நீர்வாழ்வனவற்றிற்குத்தான் நீந்திச் செல்லும் வலிமையுண்டே தவிர மனிதனுக்கில்லை என்று மதங்கூறும் மகேசனது விதி, மதி நுட்பத்தால் கண்டு பிடிக்கப்பட்ட கப்பல் மூலமாக முறியடிக்கப்பட்டுவிட்டது, பறக்கும் சக்தி பரமனால் பறவை யினத்துக்கு மட்டும்தான் படைக்கப்பட்டது என்ற கூற்றுங்கூட மணிக்கு நூற்றுக்கணக்கான மைல் வேகத்தில் செல்லும் விமானத்தைக் கண்டபின் பொய்யாகிவிட்டது. பரமசிவன் தன் ஆசைநாயகி பார்வதி தேவியாருடன் பேரானந்தமுடன் வாழ்வு நடாத்தும் பருவதம்—தலையாலேயே நடந்து சென்று (எப்படி முடிந்ததோ!) காரைக் காலம்மையாராலும் காணமுடியாத கைலயங்கிரி—என்று புராணம் போற்றுகின்ற இமயத்தின் உச்சிக்கு ஏறிய வீரன் டென்சிங்: புராணப் பொய்யை நம்பாமல் புத்தியை நம்பியதால்தானே வெற்றியடைய முடிந்தது!

மனிதனது வாழ்வை வளமாக்குவது அறிவு—மதி! அவனை அடிமையாக்குவது மதம் விதி!

ரயிலைக் கண்டு பிடித்த போது, கப்பலை மிதக்க விட்டபோது, முதல் அணையைக் கட்டிய போது, விமானத்தைப் பறக்க விட்டபோது பேயாட்டம் ஆடுகிறது மதம். அதற்கு வக்காலத்து பேசுகின்ற ஆசாமிகளுக்கு சிறிதேனும் மனிதாபிமானம் இருக்குமானால் ரயிலிலே ஏறக் கூடாது. விமானத்திலே பறக்க கூடாது; காரிலே செல்லக்கூடாது. கண்ணாடி கண்ணுக்கு அணியக் கூடாது; மருந்து உண்ணக் கூடாது; விஞ்ஞான சாதனைகளை உபயோகிக்கக் கூடாது' ஏனெனில் அவர்கள் வீசிய தொல்லைகளைத் தாங்கி உருவானவைகள், அவைகள்.

மதியின்மேல் கொண்ட மட்டற்ற நம்பிக்கையிலே ஆர்க்கிமிடிஸ் என்ற விஞ்ஞானி கூறுவதைப் பாருங்கள்.

" Give me where. I stand; I will move the earth " 'எங்கே நிற்பது என்பதைச் சொல், இந்த உலகத்தை நான் அசைக்கிறேன்' என்று எவ்வளவு உறுதியுடன் கூறுகின்றார் பார்த்தீர்களா! ஆர்க்கிமிடிஸ் போன்ற அறிஞர்கள் மதப்புரட்டுகளை மதியாது செய்த ஆராய்ச்சி முயற்சிகளால்தானே நாம் இன்று அற்புதமான விஞ்ஞான நன்மைகளை அடைய முடிகிறது.

மதக் கட்டளைகளைப் புறக்கணித்து மதி காட்டும் வழி நடந்ததால்தான் இன்று உலகம் அணுகுண்டு போன்ற ஆபத்துகளுக்கு ஆளாக நேரிட்டுள்ளது என்று 'ஆலாபனம்' செய்ய ஆரம்பித்துள்ளனர் இன்றைய 'ஆஸ்திக' சிகாமணிகள். கல்லாயுதம் கண்ட நேரத்திலும், அதன்பின் வில்லும் வேலும் வாளும் உருவாக்கிய காலையிலும் அதை அடுத்து துப்பாக்கியும் பீரங்கியும் கண்டு பிடிக்கப்பட்ட காலத்திலும் மேற்கண்டவாறே புலம்பி வந்தனர் அந்தப் புத்தியை மதியாதவர்கள். கத்தரிக்காயை வெட்ட வேண்டிய கத்தியை கழுத்தை அறுக்க உபயோகப்படுத்தினால் அது 'கத்தி' கண்டு பிடித்தவனது குற்றமாகுமா!! அதுபோல அணுசக்தி மூலம் பாலைவனத்திலும் பனிப்பிரதேசத்திலுங்கூட பயிரிடலாம். தீர்க்க முடியாத நோய்களையெல்லாம் போக்கும் வழிகாணலாம். கப்பல்களும் விமானங்களும் ஓட்டலாம். மனித தேவைக்கான எத்தனையோ நல்வழிகட்கு உபயோகிக்கலாம். பிற கோளங்களுக்குச் செல்லும் (ஆஸ்திகர்கள் கனவிலும் கூட எண்ணாத) சாதனைகளுக்கும் பயன் படுத்தலாம். ஆதிக்க எண்ணங் கொண்டோரும் ஆசைவெறியர்களுமே அழிவுக்குண்டு செய்ய பயன் படுத்துகின்றனர். அதற்காக மதியைப் பழிப்பது மடமையாகும்.

சமீபத்தில் லண்டன் மாநகரில் நடைபெற்ற உலக விஞ்ஞானிகள் மாநாட்டின்போது தத்துவ ஞானி ரஸ்ஸல் என்பார் 'உலகம் பூராவிலுள்ள மக்களின் வறுமையை ஒழிக்கவும் பொருளாதார நிலையை உயர்த்தவும் யுத்த பீதியை போக்கவும் கூடிய சக்தி விஞ்ஞானிகளின் கையில்தான் 'உள்ளது' என்று கூறிய உண்மையுரையை உற்று நோக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நமது நாட்டிலே மதம் மக்களை எத்தனை பிரிவுகளாய்ப் பிளவுபடுத்தியுள்ளது எண்ணிப்பார்க்க வேண்டாமா? எத்தனை யெத்தனை சாதிகள்! அதனால் எவ்வளவு சண்டை சச்சரவுகள்!

மதம் சமயம் ஜாதி என்ற வார்த்தைகள் தமிழ் அகராதியிலே யில்லாதவை. 'மதம்' என்ற ஒரு தமிழ்ச் சொல் 'வெறி' என்ற பொருளில்தான் உள்ளது.

நாம் நமது நாட்டை இழந்தது—பண்பாட்டைத் துறந்தது—நாகரிகம் அழிந்தது—தன்மானம் தொலைந்தது—நம்மையே மறந்தது—எல்லாம் மதவாதியினால்தானே! மதமென்னும் பேய் பிடியாதிருத்தல் வேண்டும் என்று பாடினார் வடலூர் அடிகளார். சாதியிலே மதங்களிலே சாயாதீர் என்றார்! சிந்தித்துக் கூறுங்கள்! மடமை வழிநடத்தும் மதம் வேண்டுமா? வாழ்வாங்கு வாழச் செய்யும் மதி வேண்டுமா! தீர்ப்புக் கூறுங்கள் தோழர்களே.

வழி செய்வீர் -- வாழ்வளிப்பீர்!

பொன்னும் புடம் போட்டு ஒளி ஏற்றப்படாவிட்டால் பொலிவு ஏது? வைரமும் பட்டை தீட்டப்படாதவரை மதிப்பேது? திருத்தப்படாத நிலைமையிலே ஓர்காலம் இருந்தது அந்தத்தீவு; இல்லை இல்லை, கடல் சூழ்ந்த நாடு! வளமான பூமியாம் இலங்கைக் காடு மக்கி மங்கிக் கிடந்த வேளையிலே ஆபத்பாந்தவா! அபயமளிப்பாய் என்று கெஞ்சிற்று. உழைப்பை நல்கினான் உத்தமத் தமிழன். தன் இரத்தத்தைச் சேற்றிலே ஊற்றி உரமாகயிட்டு, சொர்க்க பூமியாக மாற்றி, இன்று உலக நாடுகள் பல அதனிடம் வளப்பொருளாம் ரப்பரும் தேயிலையும் கேட்கும் உன்னதமான நிலைக்கு உயர்த்தினான். மேனி சோரப் பாடுபட்ட அவன் இன்று வேதனைச் சிந்து பாடும் ஏட்டிலே இடம் பெறுகிறான். கண்ணீர்த் துளிகளை சிந்துகிறான இலங்கை மாதாவின்மடிமீது!

வளமான தரணி —வகையான ஆட்கள் அங்கு இல்லை, வாரீர் நீவிர்! உழைப்பு நல்குவீர்! ஏற்ற ஊதியம் பெறுவீர், பவுணைத் தருகிறோம், பயப்பட வேண்டாம். வறண்ட உங்கள் வாழ்க்கையும் வளமாகுமல்லவா! என்ற வார்த்தை ஜாலங்களைக் கொட்டி அழைத்துச் சென்றது திராவிடத்துத் தமிழனை; அன்று உழைப்புத் திறனற்ற மனிதனை சுமந்து கொண்டிருந்த இலங்கை பூமி. பச்சரிசிச் சோறும் பழமுடன் பாயசமும் தருகிறேன் என்றால் முண்டியடித்துக் கொண்டு வருகிறேன் என்று சொல்வது பசித்தவன் இயல்பு, வெள்ளை ஆதிபத்தியத்தின் கீழ் பழங்கஞ்சியும் பச்சைமிளகாயும் கிடைக்காமல் பரிதவித்திருக்கின்றனர் நம்மரும் திராவிடத்தினர், ஏன்! இன்றும்தான் அந்த நிலை வடவன் ஆதிபத்தியத்தின் கீழ்.

வெள்ளையன் வீசிய ஆசைச் சொல்லிலே ஏமாந்தான், கடல் கடந்து சென்றான். உழைத்து வாழவேண்டுமென்ற எண்ணம் படைத்தவனாயிற்றே தமிழன் 'இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்' என்ற அறிவுக்கு அமுதான குறட்பாக்களை அறிந்தவனல்லவா தமிழன்! சோம்பேறியாக வாழத்தெரியாதிருந்த—வாழ வசதியில்லாதிருந்த, அன்றைய தமிழ் மகன் சென்றான், அடர்ந்த காடுகளையும் குவிந்து கிடந்த குன்றுகளையும் கண்டு மனஉறுதி குலையவில்லை, பயங்கரமான விலங்குகளையெல்லாம் விரட்டியடித்தான். நச்சுப் பூச்சுகளின் தொல்லைகளையெல்லாம் சமாளித்தான். எல்லையில்லா துன்பத்தையெல்லாம் தாங்கிப் பாடுபட்டான் இன்ப விளைச்சலுக்காக! கரடுமுரடுகளையெல்லாம் வெட்டிப் பண்படுத்திப் பல வளமும் விளைவித்து எழில் நடனமாடும் பொன்னாடாக்கி விட்டான், இனி நமது தாயகம் இந்த இலங்கைதான் என எண்ணினான், மகிழ்ந்தான், தன் உழைப்புக்கு பலன் கிடைத்து விட்டதென்று! மேலும் மேலும் உழைத்தான் இலங்கையின் உயர்வுக்காக. தான் பிறந்த நாட்டை—தமிழகத்தையே மறந்தான். பிள்ளைகுட்டிகளைப் பெற்றெடுத்து குடும்ப வரிசைகளை அங்கேயே உருவாக்கிவிட்டான்.

அந்த உத்தமர் வழி வந்தாரை தன் தாயகம் இலங்கைதான் என்று எண்ணியிருந்தோரை இன்று வெளியே போகிறாயா பிடரியைப் பிடித்து வெளியே தள்ளட்டுமா என கொக்கரிக்கிறார்—மனுவின் மறுபதிப்பான இலங்கைப் பிரதமர் ஜான் கொத்தலவாலா; என்னென்போம் அவரது கொடுமையை! எங்கே ஐயா போவது நாங்கள் என கேட்கிறார்கள். உன் நாட்டிற்குப்போ, புண்ணிய பாதத்திற்குப் போ. சக்கரக் கொடி பறக்கும் இந்தியாவுக்குப்போ, என்கிறார் சிங்கக் கொடி நாட்டார். என் நாடு இதுதானப்பா என்கிறான். யாரடா சொன்னது அப்படி—வந்தவன் போனவனெல்லாம் உரிமை கொண்டாட என்ன நெஞ்சத் துணிவடா உனக்கு' என்று மிரட்டுகிறான். நான் பிறந்ததிலிருந்து இங்குதானே வாழ்ந்தேன், இந்த நாட்டிற்குத்தானே என் உழைப்பைச் செலவிட்டேன். என் வாழ்வெல்லாம் இந்த நாட்டின் உயர்வுக்குத்தானே பயன் படுத்தினேன் ஐயா என்று கேட்டால் சும்மாவா உழைத்தாய் அதற்கு தக்க ஊதியம் பெற்றுவிட்டாயே எனப் பதில் வருகிறது. அப்பா காலத்தில் கிடைக்க எங்கள் உழைப்பு ஞாலத்தைவிடப் பெரிது. சிந்தித்து செம்மைப் படுத்தும், உம் மனதை என்கிறான். எங்களுக்கு அது பற்றி கவலையில்லை என்கிறார் இலங்கை சலாசர். அந்த நாடும் எங்களை ஏற்றுக் கொண்டு வாழ்வளிக்க மறுத்தால் என்ன செய்வது அய்யா! போகிறவர்களெல்லாம் பட்டினி எனும் பெரும் நெருப்பால் பொசுக்கப்படுகிறார்கள். எங்களை அகதிகளாகக்கூட ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். எங்கள் காமராசர் வாய்திறக்கவே மாட்டேன் என்கிறாரே என விம்முகிறான்,

கீழவைப்பாறு, மாறன்

'உன் முன்னோர் பிறந்தது அந்த நாடு; எனவே உன் சொந்த நாடு அதுதான் போ, போ!' என்கிறார், விரட்டுகிறார்.

'அங்கே எனக்கென்று ஊர் கிடையாதே துரையே' எனக் கண்ணீர் விடுகிறான் நம்மவன், 'அப்பாவி கண்ணீர் விட்டுப் பலன் என்ன! நீ போக வேண்டியதுதான், உன் நாட்டுப் பிரதமர் ஆசியாவின் ஜோதி கவனித்துக் கொள்வார்' என்று கிண்டல் செய்கிறார். 'நாங்கள் செத்து மடிந்து குவியும் பிணமலைகளையா' எனத் திருப்பிக் கேள்வி போடுகிறான் தமிழன்.

'இதோ உங்கள் நாட்டின் தூதுவர்' அவரைக் கேள்' கேள்விக்குப் பதில் இது. 'எங்களைப்பற்றி அவருக்கு அக்கறை இருந்திருந்தால் உன் கொடிய மிரட்டலுக்கு ஆளாகி யிருப்போமா! எங்கள் தங்கத் திராவிடத்து மகன் தூதுவனாக வந்திருந்தால் எங்கள் துயர் தெரிந்திருக்கும். வருகிறவனெல்லாம் வடநாட்டான். எனவேதான் எங்கள் குறைகண்டும் வேதனைப்படாமல் வெட்கப்படாமல் இருக்கிறான்' என்று குமுறுகின்ற அக்கரை பாட்டாளிப் திராவிடத்து மக்கள், ரப்பர் தோட்டங்களிலும் தேயிலைக் காடுகளிலும் அட்டை கடிக்கு ஆளாகி அரவம் தீண்டுமோ என்ற அச்சத்துக்கு ஆளாகி அரைவயிற்றுக் கஞ்சிக்கும் அவதிப்படும் தமிழன் தங்கமாக குவிக்கான்; அவன் வீட்டிலல்ல, அந்தச் சிறு நாட்டிற்கு! அத்தீவு பொருளாதாரத்திலே ஏற்றம் பெற்றமைக்கு காரணமே தமிழன், செய்த நன்றியைக் கொன்று பாடுபட்ட அவனையும் கடைகளிலே வீதிகளிலே எடுபிடி ஏவலாளராகப் பணியாற்றுகின்ற தோழர்களையும் இலங்கை அரசினர் அடித்துத் துரத்துகின்றனர். நன்கு புரிகிறது இந்தியாவின் ஆளவந்தார்களுக்கு! நாங்கள் என்ன செய்வோம் என்று கைவிரித்து விட்டனர்.

இந்நேரம் அண்ணல் காந்தியின் வாரிசு என இறுமாந்திருந்து எது சொன்னாலும் எவரும் கேளார் என்ற அகந்தையுடன் நான்சென்ஸ், முட்டாள்தனம், மூளை காலிகள். என்று அடிக்கடி அரசியல் எதிர்க்கட்சிகளை வசையிலே இசைபாடும் நேரு பண்டிதர், வடநாட்டுக்காரர்கள் அல்லல்பட நேர்ந்திருந்தால், பரிந்து பேசி கச்சையை வரிந்து கட்டிப் போராட்டப்படை வரிசையில் நின்றிருப்பார். அங்கே அவதியுறுவது தமிழன்தானே! திராவிடத்து திருமகன்தானே! எவ்வாறு அவருக்கு பற்றும் பாசமும் ஏற்படும்.

தினம் தவறாமல் ஆயிரமாயிரம் தமிழர்கள் வெளியேற்றப்படுகிறார்கள் என்பதை பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்து கொள்கிறோம். திருநெல்வேலி இராமனாதபுர மாவட்டங்களிலே பெரும்பாலான கிராமங்களில் இலங்கையிலிருந்து திரும்பியோர் எண்ணிக்கை ஏராளம். அவர்களெல்லாம் திக்கற்று என்ன செய்வதென்றே புரியாமல் வெளியேவர வெட்கப்பட்டு வீட்டினுள்ளேயே அடைபட்டதுபோல் இருக்கின்றனராம். இங்கோ வேலை கிடைப்பது அரிது. வேலை கிடைத்தாலும் ஊதியம் கிடைப்பது மிகக் குறைவு. இதிலே அவர்கள் பெரிய குடும்பங்களை எவ்வாறு காப்பாற்ற முடியும், அங்கு சென்றோர்கள் 99 சதவீதம் அன்றாடங் கூலிகளாய் வேலை செய்தவர்கள்.

எனவே அவர்களிடம் பணவசதியும் கிடையாது. சிறுசிறு வியாபாரங்களோ அல்லது தொழிலோ நடத்துவதற்கு! இலங்கைவாழ் இந்தியர் அனைவரும் வந்தால் அவர்கள் தங்கள் வாழ்க்கையை சரிவர அமைத்துக் கொள்ள வசதியில்லாமல் வருந்துவார்கள். எனவே இந்திய அரசாங்கம் அவர்கள்வாழ ஏதேனும் திட்டம் வைத்திருக்கிறதா! என மத்திய அரசின் நிதிமந்திரியாராம் தேஷ்முக்கை முன்பொருமுறை பத்திரிகையாளர்கள் கேட்டனராம். திட்டங்கள் எதுவும் இல்லை, ராஜ்ய அரசாங்கங்கள் தான் சமாளிக்க வேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார். வடநாட்டு அகதிகளுக்கு கடலநீரைப்போல் பணத்தை வாரியிறைத்து வாழவைத்த அதே அரசாங்கத்தின் நிதிமந்திரியார் கூறுகிறார் இப்படி! காமராசர் பார்க்கலாம் பார்க்கலாம் என்கிறார். அவர், இலங்கையினின்று வெளியேற்றப்பட்ட தமிழ் மகன் திராவிடத்திலே பிச்சை எடுக்கும் காட்சியைப் பார்க்கலாம் என்கிறாரோ என்னவோ!

ஐயோ! ஏன் இந்த நிலை பசி என்று வந்தவனுக்கு 'ஐயமிட்டுண்'டு தனக்குப் பசித்தாலும் "ஏற்பது இகழ்ச்சி" என்று வாழ்ந்தவன், ஆவிற்குநீரென்று இரப்பின் நாவிற்கு இழிவு வருமே என்று அஞ்சிய குணத்தான் உழைக்காமல் உண்ண மாட்டேன் என்று உறுதி படைத்த உத்தமன் என்ன செய்யப் போகிறானோ!

திராவிட நாடு திராவிடருக்கானால்; நமது தாயகத்திற்கு வேலி அமைத்து விட்டால், நமது சொத்துக்கு நாமே சொந்தக்காரர்கள் ஆகிவிட்டால் அவதியுறும் பிறநாடு வாழ் நம்மவருக்கு நிச்சயம் ஆறுதல் கிட்டும், அதனால் வெளியேற்றப்பட விருக்கும் நம்மவருக்கு உடனடிப் பரிகாரம் என்ன!

வெளியேற்றப் படவிருக்கும் தமிழருக்கு வாழ்வளிக்க அரசாங்கம் டில்லி ஆதிபத்தியம் மறக்குமானால் பெருங் கொந்தளிப்பு நாட்டிலே ஏற்பட்டுவிடும் என்பதைக் காலம் குறி காட்டுகிறது, நாங்கள் வரிப் பணத்தை அள்ளித்தருகிற மத்திய அரசாங்கத்தின் முதல்வராம் நேரு பண்டிதரைக் கேட்கிறோம். விவேகமிருப்பின் வழிசெய்வீர் வாழ்வளிப்பீர் என்று.

வேலையில்லை, வீட்டிலே மகிழ்ச்சியில்லை, அடுப்பிலே எரியும் நெருப்பைக் காணோம், பானையிலே ஈரமில்லை பசியடக்கப் பருக்கைச்சோறு இல்லை என்று சோகப் பெருமூச்சுவிடுகின்றனர். இந்த நாட்டின் கண்மணிகள் எலும்புருவங்களாக மாறிவிட்ட ஏழைகள்!

அதேநேரத்தில் மேலும் இலங்கைத் தீவிலிருந்து தமிழர்கள் வெளியேறிய வண்ணம் இருக்கின்றனர். இது இதயம் துளைக்கும் சேதி நமக்கு. ஆனால் ஆட்சியாளர்களுக்கோ அக்கரை அரும்பவே காணோம். வருடம் ஒன்றுக்கு கவர்னருக்கு மட்டும் பத்து லட்சம் ரூபாய்களை அள்ளித் தருகின்ற மாநில அரசாங்கமாவது வெளியேறுகின்ற தமிழனுக்கு ஏதாவது வழிசெய்வீர், வாழ்வளிப்பீர் என்று கெஞ்சுகிறோம். காங்கிரஸில் உள்ள தன்மானத் தோழர்களாவது சிந்தியுங்கள். காலம் காட்டுகிறது நமக்கு நல்லதொரு பாடம். காந்தி மண்டபம் கட்டுவதால் நம் கவலை தீர்ந்துவிடாது. திராவிடத்தை மீட்டலன்றி நமக்கு வாழ்வில்லை. எனவே படைவரிசை கூட்டி திராவிடரியக்கத்தில் இணைந்து நாடு மீட்கும் பணியில் ஈடுபடுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு. வளம் கொழித்த திராவிடம் மீண்டும் செழிக்க, பிறநாடுகளில் அவதியுறும் நம்மவர்கள் தாயகத்தில் வந்துவாழ வழிசெய்வீர் என்று உங்களையும் அழைக்கிறோம்.

சீயக்காய்த் தூள் REGD No. 13817.

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற

வெண் சங்கு சீயக்காய்த் தூள்

எங்கும் கிடைக்கு

மணத்தில் மிகுந்த

செல்வம் ராணி ஊதுபத்திகளை

உபயோகியுங்கள்

தயாரிப்பவர்:

வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி

3037—38 டபீர் குளம்ரோடு

தஞ்சாவூர்

ஏஜெண்டு தோழர்களுக்கு

●

வணக்கம், செப்டம்பர் முடிய பட்டியல் இன்று அனுப்பப்பட்டி ருக்கிறது. அன்பு கூர்ந்து உடன் பட்டியலில் கண்டுள்ள தொகையைத் தவருது அனுப்ப வேண்டுகிறேம்.

—நிர்வாகி 'திராவிடன்'

திராவிடன்

சென்னை : 30—9—55 : வெள்ளி

பணம் பாழாகும் படலம்!

●

நேரு பண்டிதர் ஆட்சியில் நிர்வாகக் கோளாறு—ஊழல் ஆகியவைகள் கும்மாளமடிக்கின்றன என்று அடிக்கடி பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. அவ்வித செய்திகளைத் தருவோர் எதிர்க் கட்சிக்காரர்கள் அல்ல. சர்க்காரின் கணக்குகளை பரிசிலனை செய்யும் பொறுப்பாளர்களே இவ்விதத் தீர்ப்பை அவ்வப்போது அளித்து வருகின்றனர்!

வீடுகட்டும் திட்டத்திலிருந்து வெளிநாட்டுத் தூதுவர் அலுவலகச் செலவுகள்வரை ஊதாரித் தனமாகச் செய்யப்பட்டிருக்கிறதென்று 'சர்டிபிகேட்' கொடுக்கப்பட்டிருப்பதை தேசிய ஏடுகளே எடுத்துக் காட்டியிருக்கின்றன,

பரங்கியர் தர்பாரில் நடைபெற்ற தண்டச் செலவுகளைப் பற்றி தட்டிக் கேட்டுப் பேசி வந்த பாரதமாதா புத்திரர்கள், தங்கள் ஆட்சியின் நிர்வாகத்தில் மக்களின் வரிப் பணத்தை ஊதாரித்தனமாகச் செலவிடுவதை எண்ணிப் பார்த்துத் திருந்துமளவுக்குக் கூட மனவளம் பெற்றதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் போதாக்குறைக்கு டெல்லிப் பாராளுமன்ற உறுப்பினர்களில் பலர் கொண்டுள்ள போக்கானது, தொல்லைகளுக்கிடையே மக்கள் செலுத்திவரும் வரிப் பணத்தை பாழாக்குவதாயிருப்பதுகண்டு வருந்துகிறேம், வருந்துவதுமட்டுமல்ல, அவர்களின் பொறுப்பற்ற தன்மை கண்டிக்கக் கூடியதுமாகும்.

இந்தியப் பாராளுமன்றத்தில் 499 உறுப்பினர்களும் ராஜ்ய சபையில் (மத்திய மேல் சட்டசபை) 219 உறுப்பினர்களும் இருக்கின்றனர்!

இந்த உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் மாதச் சம்பளம் 400 ரூபாய்! சட்டசபை கூட்டங்கள் நடைபெறும் நாட்களில் டெல்லியில் தங்கியிருந்து பணியாற்ற "படி" தினந்தோறும் ரூபாய் 21 தரப்படுகிறது!

இந்த வசதி மட்டுந்தானு? இந்தியா முழுவதும் இரயிலில் பவனி வர சர்க்கார் செலவில் (மக்கள் தரும் வரிப்பணத்தில்) வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

இவ்வளவு வசதிகளைப் பெற்றுவரும் உறுப்பினர்கள் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொள்கின்றனரா என்பதை எடுத்துக் காட்டும் முறையில் சமீப காலமாக டெல்லிப் பாராளுமன்றக் கூட்டங்களில் "கோரமில்லாத" அகோரநிலை அவ்வப்போது ஏற்பட்டு வருகிறது. இதைக் குறித்து டெல்லிப் பாராளுமன்றத் தலைவரே மனவேதனையுடன் அண்மையில் பேசியிருக்கிறார்!

நேரு பண்டிதரின் தலைமையில் இயங்கிவரும் ஆட்சி பீடம், பொதுமக்களின் வரிப் பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாயை பாழடித்த பிரச்னையைப் பற்றி பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றபோது 499 உறுப்பினர்களில் 25 பேர்கள்கூட மன்றத்தில் இருக்கவில்லையாம்! இவர்களுக்குப் பெயர் மக்கள் பிரதிநிதிகள்!

இத்த மக்கள் மன்ற உறுப்பினர்களுக்குச் சோறு போடுவதற்காக 1954—55-ம் ஆண்டில் ஒரு கோடியே முப்பத்திநாலு லட்சத்து முப்பதாயிரம் ரூபாயும், 1955—56-ம் ஆண்டில் ஒரு கோடியே எழுபத்து மூன்று லட்சத்து ஐம்பத்து மூவாயிரம் ரூபாயும் செலவாகியிருக்கிறதாம்!

இவ்விதம் பொதுமக்களின் வரிப்பணத்திலிருந்து ஆண்டொன்றுக்கு கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்துக் கொள்ள உரிமை பெற்றவர்கள், அதே பொதுமக்களின் வரிப்பணம், ஆட்சியினரால் பாழாக்கப்பட்டுள்ள படலத்தைப் பற்றி சட்டசபையில் விவாதிக்கப்படும்போது சபையில் இருக்கவில்லையென்றல் இவ்வித உறுப்பினர்களின் செயலை எதற்கு ஒப்பிடுவது என்று கேட்கிறேம்.

அரசியல் ஆதிக்கத்தின் பலத்தால் மக்கள் மன்றத்தில் பெரும்பான்மையான இடத்தை அடைத்துக் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியினருக்கு இதைக்குறித்து கவலையில்லா விட்டாலும் இதர கட்சியினரும், சுயேச்சை உறுப்பினர்களுமாவது பொறுப்புணர்ந்து நடக்க வேண்டாமா யென்று கேட்கிறேம்.

சென்னை சர்க்கார், தங்களின் செலவுக்குப் பணம் போதவில்லையென்று ஏழை விவசாயிகளின் மீது வரியைத் திணிக்கின்றனர். இந்நிலையில் மக்கள் தரும் வரிப்பணமோ அணைத்திந்தியா என்ற பேரால் நேரு பண்டிதர் ஆட்சியில் பாழாக்கப்படுகிறது.

இவ்வித பொறுப்பற்ற பிரதிநிதிகளுக்கு வாக்காளர்கள் அடுத்து வரும் தேர்தலில் தக்க பாடம் கற்பிக்க வேண்டுவது மிக மிக அவசியம்,

கடந்த எட்டு ஆண்டு சுயராஜ்ய ஆட்சியில் பணம் பாழாகும் படலம்தான் விரிகிறது. இந்த லட்சணத்தில் நாட்டை ஆளத் தங்களைவிட வேறு யாருக்கும் தகுதியில்லை யென தப்பட்டை அடிக்கின்றனர் இன்றைய ஆளும்வர்க்கத்தினர்—இதைவிட வெட்கக்கேடு வேறு இருக்க முடியாதல்லவா!

டால்மியா கைது

சர்க்காரை மோசடி செய்தாராம்!

2 கோடியே 22 லட்ச ரூபாய் பெறுமான சர்க்கார் பத்திரங்களை மோசடி செய்ததாக 25—9—55 அன்று கைது செய்து காவலில் வைக்கப்பட்ட வடநாட்டுப் "பணுதிபதி" இராமகிருஷ்ண டால்மியா 26—9—55 அன்று ஜாமீனில் வெளிவந்திருக்கிறார்!

●

தோழர் ஆதித்தன் மீது வழக்கு

மாத்தூர் விவசாயிகளின் கிளர்ச்சியில் ஈடுபட்டு 144 தடை உத்திரவை மீறி சட்ட விரோதமான கூட்டத்தைக் கூட்டியதாக "தினத்தந்தி" ஆசிரியர் எஸ். பி. ஆதித்தன் மற்றும் 10 பேர் மீது சைதாப் பேட்டை சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் போலீசார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதற் கேற்ப 28—9—55-ம் தேதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 8—10—55க்கு ஒத்திவைக்கப்பட்டது. தோழர் ஆதித்தன் அவர்களை கோர்ட்டுக்கு கைவிலங்குடன் அழைத்து வந்தனர்.

தோழர் ஆதித்தன் 19—9—55 அன்று கைது செய்யப்பட்டு சென்னைச் சிறையில் 'சி' வகுப்பில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

●

சென்னை சட்ட சபைக்கு புதிய சபாநாயகர்

27—9—55-ம் நாளன்று சென்னை சட்ட சபையின் புதிய சபாநாயகராகத் தோழர் என். கோபால மேனன் (காங்கிரஸ் கட்சி) தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். கோபால மேனனுக்கு 134 வோட்டுகளும் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட திராவிட பார்லிமெண்டரி கட்சித் தலைவர் தோழர் சுயம்பிரகாசம் அவர்களுக்கு 64 வோட்டுகளும் கிடைத்தன.

நடக்க இருப்பவை

காங்கேயநல்லூர்

2—10—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு தி. மு. கழக சார்பில் திராவிட நாட்டுப் பிரிவினை வாரப் பொதுக்கூட்டம் தோழர் டி, ஆர். பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ, எல். சி, கிருஷ்ணசாமி, பகுல் கருத்தோவியன், வே. அ, இளஞ்செழியன் பேசுவர்.

கொடுங்கையூர்-மூலக்கடை

2—10—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு தி. மு. கழக சார்பில் மூலக்கடைத் திடலில் பொதுக் கூட்டம் நடைபெறும், தோழர் மு. ராசன் அவர்கள் தலைமையில் நாஞ்சில் மனேகரன், தோழியர் சத்தியவாணிமுத்து பேசுவர்.

மேலூர்

தி. மு. கழக சார்பில் மண்ணடி திடலில் 2—10—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர் மு. குணசீலன் தலைமையில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், கவிஞர் கண்ணதாசன் ஆ. கிருஷ்ணன் பேசுவர்.

அலிசேக்மன்சூர் - அலிபாத்து

தோழர் அலிசேக்மன்சூர் அவர்களின் துணைவியாரான அலிபாத்து அம்மையார் 18-9-55-ம் நாளன்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுத்தார்.

அடுத்த வாரம்

திராவிடப்பூங்கா—கூத்தரசன் மடல்—திராவிட நாட்டுக் கல்வி வரலாறு ஆகிய பகுதிகளுடன் மற்ற சிறப்புக் கட்டுரைகளும் வெளிவரும்.

ஆ—ர்

ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

தோழர் ஏ. கோவிந்தசாமி எம், எல். ஏ. அவர்கள் தொண்டைப்புண் நோய் காரணமாக, சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தங்கி 9—9—55 முதல் சிகிச்சைபெற்று வருகிறார். சட்டசபை கூட்ட நிகழ்ச்சிகளுக்கும் போகமுடியாமலிருக்கிறார்; மேலும் இரண்டு வாரங்கள் வரை தங்கி சிகிச்சை பெறவேண்டுமென்றும், தொண்டைப்புண் குணம் பெற்ற பிறகு தொண்டையில் சிறு இரண சிகிச்சை செய்யவேண்டி இருக்கும் என்றும் டாக்டர் திரு. சத்திய நாராயணன் அபிப்பிராயப்படுகிறார். வழக்கம்போல் உணவு வகைகள் அதிகம் உட்கொள்ள முடியாத காரணத்தினுல், தோழர் கோவிந்தசாமி அவர்கள் சிறிது உடல் பலக்குறைவாகவே இருக்கிறார், நண்பர்கள் அடிக்கடி போய்ப் பார்த்து வருகின்றார்கள்,

முதல் முகலாயப் பேரரசி — சரித்திரச் சித்திரம்

சுல்தானா ரசியா

கௌதமன்

5

பேச்சின் எதிரொலி 1 :

ரஸியாவைப்பற்றி மக்கள் !

இளவரசியார் பேசியதைக் கேட்டீர்களா...!

கேட்டது மட்டுமல்ல; அனுதாபமும் பட்டேன்!

யார் மீது...!

எவர் மீதிருக்க முடியும்? இந்த நாட்டின் மீதுதான்!

எனப்படி...!

ஏனு...! கொடுத்து வைக்காத நாடு இந்த நாடு என்பதால்தான்!

ஒன்றும் புரியவில்லையே...!

புரியாததுதான்—ஆனாலும் புதுமை! இஸ்லாமிய சமுதாயததிலே இப்படியொரு வீரமங்கை தோன்றுவாள்—இவ்வளவு அருமையாகப் பேசுவாள்—மற்றவருக்குச் சொல்லருமைக் காட்டி, அவர்களைப் புல்லரிக்கவைப்பாள் என்று நாம் நினைத்ததே இல்லை! என்ன அருமை! என்ன கண்ணியம்! எவ்வளவு ஒழுங்கானபேச்சு! எத்தகைய அழகான விளக்கங்கள்! ஆம்! அத்தனையும் உண்மை! நேர்மையின் பாற்பட்ட நெஞ்சக் குமுறல்களவைகள்! பட்டத்து வாரிசக்கு, அவர்தான் உரிமையாளரென்பதை, உள்ளத்திலே மறைத்து வைத்துக் கொண்டு அதை லேசாகவும், மற்றவரும் தன்னைத் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாதென்று பக்குவமாகவும், இளவரசியார் எடுத்துரைத்த நேர்த்தி உள்ளபடியே என் நெஞ்சை அள்ளுவதாகத்தான் இருக்கிறது. எனவேதான் சொன்னேன். இந்நாடு கொடுத்து வைக்காத நாடென்று. அத்தகைய அழகு ராணியை அரியணையிலிருத்தி, வெண்குடை நிழலிலிருந்து அவள் வழங்கும் நல்லாட்சியினையும், நேர்மைச் சட்டங்களையும் போற்றி மகிழும் பாக்கியத்தை இந்நாடு பெறவில்லை. மாறாக அவளை துரத்துகிறது, அவளுயிருக்கு ஆபத்து விளைவிக்கவும் அரும்பாடுபடுகிறது! அந்தப்புரம் சளைக்கவில்லை அந்தப் பெருமுயற்சியில்.

ஹூம்! ரஸியா மட்டும் பிணமானால் !

உட்கார்ந்து கொண்டு ஒப்பாரி வைப்பீர்கள் போலிருக்கிறது......!

அப்படிச் சொல்லாதீர்கள் ! மக்கள் கூட்டத்திற்கு அழத்தெரிந்த அளவுக்கு மேல் மற்றவர்கள் அறைந்து அடிக்கவும் தெரியும் !

தெரிந்து என்ன பயன்? நல்ல சமயத்தில் உதவவேண்டுமே அந்த அருங்கலை! எதிரிகள் வெட்டிச்சாய்க்குமுன், வேரடியைச் சுற்றிவளைத்துப் பாதுகாத்தால் தானே பெருமரம் வீழாது.

ரஸியாவைச் சுற்றி நாமிருக்கிறோம். இஸ்லாமியப் பெருமக்கள் கூட்டமிருக்கிறது. நாட்டைச் சேர்க்கும் நற்பண்பு கொண்ட பொறுப்பாளர்களிருக்கிறார்கள்!

எல்லா மிருந்துதான் ருக்னுதீனின் கொட்டம் இன்னும் ஒடுங்கியபாடா யில்லை! அந்தத் தருக்கிய சிங்காரியின் கொடுங்கோன்மையும் இன்னும் ஓயவில்லை.

ஹூம்! செய்வதை யெல்லாம் அவர் களிப்போதே செய்து அழகு பார்த்துக் கொள்ளட்டும்! இவையெல்லாம் இன்னும் ஒரு சில நாட்களுக்குத்தான், கொடிமரம் தகர்ந்து வீழ்ந்தால் கோட்டையும் தானாக தவிடுபொடி ஆகித்தானே தீரும். அப்போது பார்த்துக் கொள்ளலாம் அந்த வேடிக்கையை! ஓம்ராக்களும், பிரபுக்களும்தான் வாக்குறுதியளித்திருக்கிறார்களே — பார்ப்போம் எவ்வளவு தூரந்தான் அவர்கள் தங்கள் வார்த்தையைக் காப்பாற்றுகிறார்களென்று!

இதன் மத்தியில் இளவரசியாருக்கு நல்ல பாதுகாப்பைத் தேடித்தர வேண்டும் நாம்...!

அட! நாம் தருவது ஒருபுறமிருக்கட்டும், பள்ளிவாசலே வாக்குறுதியளித்தருக்கிறதே—ரஸியாவைக் காப்பதும் இழந்த மணிமுடியை மீண்டும் பெற்றுத் தருவதும், அதன் பணிகளில் முதன்மையானதல்லவா!

இருந்தாலும் நாம்...!

வாளாயிருக்கக் கூடாததுதான்! அரண்மனையின் நடைமுறைகளில் நமக்கெல்லாம் ஒருக் கண் இருந்தே தீரும் இளவரசியார் அரியணை பெற்ற பிறகுதான் அந்தப் பார்வைவேறுபக்கம் திரும்பும்.

சபாஷ் அந்த ஏற்பாடுதான் நாமிப்போது செய்ய வேண்டியதாகும்.

*

பேச்சின் எதிரொலி 2 :

ரஸியாவைப்பற்றி அந்தப்புற வெறியர்கள்

பெண் என்றால் ஒரு அடக்கம் வேண்டாமா? பள்ளிவாசல் செல்ல என்ன துணிச்சல் அவளுக்கு...!

சென்றதோடு விடவில்லையே அம்மா அந்தப் பிசாசு! அங்குபோய் பேசியுமிருக்கிறதே அந்தப் பெரும் பூதம். ஆடவரின் மத்தியிலே முகத்திரையெடுத்து மயக்கு முகங்காட்டி வெட்கமில்லாமல் பேசியிருக்கிறாளே அந்தச் சிறுக்கி, சகோதரி என்று சொல்லிக் கொள்ளவே யோக்கியதையில்லையே அம்மா எனக்கு...!

நீ செய்தது முட்டாள்தனம் ருக்னுதீன். சொன்ன சொல்லை தட்டிவிட்டாய். வாளெடுத்து அந்தக் கோள்மூட்டியை தொலைத்துவிட்டு மறுவேலைப் பாரென்று எத்தனையோ தடவை நானுனக்கு உபதேசம் செய்திருக்கிறேன்! நீயோ தாயுபதேசம் கேட்க மறுத்தாய்!—இப்போதோ கோடாரிக்காம்பு ஓடியிருக்கிறது பள்ளிவாசலுக்கு.

புலம்பினாளாம்! இதோ இவர்தான் சொன்னார்.

வேஷம் போடத்தானா தெரியாது. அந்த ஆந்தை முகத்தாளுக்கு...மேலும் என்ன நடந்தது மதியூகியாரே...!

நான் என்னவென்று சொல்வது அரசியாரே! மக்களை தூண்டிவிடும் அளவுக்கு நம் இளவரசியார் இந்தச் சொல்வன்மையை எங்கிருந்துதான் பெற்றாரோ...!

என்ன நேர்ந்தது அப்படி!

அரசபீடம் நும் மகனுக்குகந்ததல்லவாம்! ஆளும் உரிமை தனக்கே உரியதாம்! நம் அரசரின் கோல்முனைக்கு ஆபத்து விளைவிப்பதே பெருந்தொழிலாம். ஆட்கொல்லி சட்டமாம். குரோத நினைப்பும், கொடுங்கோன்மையும், கொலைத் தொழிலும் புரியத் தாங்கள் சளைப்பதில்லையாம். இளவரசியாரைத் தொலைக்க தாங்கள் சதி செய்து வருகிறீராம்!

அதெப்படித் தெரிந்தது அவளுக்கு !

அவர் விஷயம் நமக்கெப்படி அடிக்கடித் தெரிகின்றதோ—அதைப்போல, நம்செயலையும் அவருக்கு எவரோ அறிவிக்கின்றனர், அரசியாரே... !

தொலைத்து விடவேண்டும், அந்தக் கோள்மூட்டும் பாதகர்களை... !

என்ன...... ! என்ன...... !

தங்களைச் சொல்லவில்லை மதியூகியாரே...! இதற்குள் தாங்கள் வருத்தப் பட்டுக் கொள்ள வேண்டாம் !

அதற்காக வல்ல அரசியாரே! இன்று வரை நம்மவரென்று யார். யாரை நாம் மதித்தோமோ, அவரெல்லாம் நல்ல சந்தர்ப்பத்தில்அங்குவாய் மூடிக்கிடந்துவிட்டார்! இளவரசியாரின் பெரும் பேச்சால் போதை மயக்கெடுத்துக் கிடந்தனர் அந்த மதியூகிகள்...!

மயக்கத்தானா தெரியாது அந்தக் கோட்டானுக்கு அவள் தந்தையிருந்த போதே நம்மையெல்லாம், அவரண்டை நெருங்கவே விடவில்லையே அந்தச் சனியன் இப்போதோ பள்ளி வாசலை அப்பனுக்கிக் கொண்டிருக்கிறது !

பள்ளிவாசல்தான் அபயமளித்திருக்கிறதே அரசியாரே! இளவரசியாரின் குறைதீர ஆவன செய்வதாகவும் வாக்களித்திருக்கிறது.

தருக்கிய ஓம்ராக்களுமா தூபமிட்டனர் அந்த மங்கிக்கு!

அவரென்ன; பிரபுக்களுங் கூடத்தான்! மத குருமார்களும் கூடத்தான்!

என்ன நன்றி கெட்டத்தனமிது!

மன்னிக்க வேண்டும் அரசியாரே...! மக்களின் மாமன்றத்தின் முன்பு இவர்களின் சொற்சிலம்பம் ஒன்றுமே பலிக்கவில்லை அன்று. அத்தகைய சூழ்நிலையவர்களுக்கு! பேசியிருந்தால் மரியாதை மட்டுமல்ல; பதவியும் பறிபோகுமவர்களுக்கு! எனவே குழம்பிக் கிடந்தனர்.

என்னதான் முடிவு செய்தனர்—யாது பதிலிறுத்தனர் அந்த வஞ்சக நரிக்கு!

ஏகமனதாக வாக்களித்தனர்! குறைகளைக் களைந்தெறிவதாக இளவரசியாருக்கல்ல; மக்களுக்கே அறுதியிட்டுத் தெரிவித்தனர்,

கேட்டாயா ருக்னுதீன். நம்பிக் கொண்டிருந்தாயே, அந்த நாசகாரர்களை, வகையற்றவனே இப்போதென்ன செய்யப் போகிறாய்...மணிமுடி ஆசையை மறந்துவிடப் போகிறாயா! இல்லை வைரிகளைத் தொலைக்க வாளெடுக்கப் போகிறாயா! அல்லது இரண்டுமே யல்லாமல் சரணடையப் போகிறாயா? எதைச் செய்யப் போகிறாய்! நிர்ணயித்துப் பதில் சொல்!

என்னம்மா இப்படிச் சொல்கிறீர்கள் நானே எதைச் செய்திருக்கிறேன் இன்று வரையில்! எதைச் செய்ய முடிந்தது என்றால்! தாயருமைத் தெரிந்தவனாகத்தானே நான் நடந்து கொண்டிருக்கிறேன், இதுவரையில்! ஆளும் பீடத்திலே நானமர்ந்திருந்தாலும் என் இதயபீடத்திலே நீரல்லவா அமர்ந்து கொண்டிருந்தீர்கள்! 'இவன் நம் வைரி —பாய் இவன்மீது' என்று நீர் சொன்னால் நான் பாய்ந்திருக்கிறேன். 'இவன் நம்முயற்சிக்குஆபத்து; வெட்டிவீழ்த்து இவனை' என்றால் உடனே நானவனை வீசி எறிந்திருக்கிறேன் ! ஆனால் ஒன்றை மட்டுந்தான் நான் செய்யவில்லை — முடியாததால் அல்ல—நல்ல சந்தர்ப்பம் கிடைக்காததால், ரஸியாவைக் கொள்ளவில்லை நீர் சொல்லிய படி—பாசத்தால் அல்ல— நல்ல பாதுகாவலர்கள் அவள் மத்தியில் இருந்ததால். அவளின் அந்தப்புரத்தை அடிமைகள் காத்துக்கிடக்கின்றனர். அந்த அபிசீனிய அடிமைகள் இன்னும் அவளின் மெய்க்காப்பாளர்களாகக் கிடக்கின்றனர். அவளைக் காக்கும் கண்மணிகளாக இருப்பவர்கள் அவர்களைத் தவிர வேறெவருமில்லை.

ஏன் விழவில்லையா அவர்களும் நம் சதிக்கு!

ரஸியாவின் பாசம், நம்மைத் துச்சமாக நினைக்கத் தோன்றுகிறதே அவர்களுக்கு...... !

தொலைக்கவேண்டும் இந்தப்பதர்களை இந்நாட்டை விட்டே !

அம்மா! அதைப் பிறகு செய்துக் கொள்ளலாம் — இப்போதென்னம்மா சொல்கிறீர்கள் இந்தப் பேராபத்துக்கு!

பொறு ருக்னுதீன், கொஞ்சம்பொறு திடீரென்று போடும் திட்டமா இது? ஆபத்தின் தன்மை எனக்குத் தெரியாதா! ஆனாலும் எதையும் சிந்தித்துப் பழியில்லாத வகையில்தானே செய்ய வேண்டும், இரவெல்லாம் நானென்ன சொக்கட்டானா ஆடிக் கொண்டிருப்பேன். பார்க்கலாம், சிந்திக்கலாம்—நாளையோர் முடிவு காணலாம்.

என்னமோ எனக்கு ஒரே திகிலாக இருக்கிறதம்மா.

பேதையினும் பேதையடா நீ. எனக்கொரு மகனாகிவிட்டாயே. முட்டாளே உன்னை வீழ்த்த நான் இடங்கொடுப்பேனா? அன்புமகனை அரியணைவிட்டிறக்கிவிட்டு எந்த ஆசையாலடா நான் இங்கு உயிர் வாழ்வது? அஞ்சாதேபோ.பேசலாம், சதியோ, சாகஸமோ ஏதோ ஒன்று...போ பார்க்கலாம்!

(தொடரும்)

எமது மகத்தான துவக்க விழா

கலைஞர் மு. கருணாநிதி தீட்டிய புதிய நாடகம்

வேலூர் முள்ளிப்பாளையம் தியேட்டரில்

7—10—55 வெள்ளி முதல் தினசரி

இலட்சிய நடிகர்

எஸ். எஸ். ராஜேந்திரன் நாடக மன்றத்தார் நடிக்கும்

மணிமகுடம்

நாடகம் நடைபெறும்

கட்டணம் : 2—8—0, 1—8—0, 0—12—0, 0—6—0

பெண்களுக்குத் தரை 0—4—0

குறிப்பு : தினசரி இரவு 10 மணிக்கும், ஞாயிறு மட்டும் மாலை 6-45 மணிக்கும் நடைபெறும். பிரதி திங்கள் தோறும் விடுமுறை.

கேள்வி? பதில்.

அஞ்சாநெஞ்சன்

●

கே: தட்சிணப்பிரதேச அமைப்பு தி. மு. கழகத்தார் கேட்டுவரும் திராவிட நாட்டு அமைப்பு போலவிருந்தும் தி. மு. கழகத் தலைவர்கள் அதை எதிர்ப்பது தவறல்லவா?

—எஸ். கே மூர்த்தி, திருச்சி

ப: தோழரே, திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி வரும் திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றித் தாங்கள் சரிவர புரிந்து கொள்ளாமைக்கு வருந்துகிறேன். இனி வகுக்க யிருப்பதாகக் கூறப்படும் தட்சிணப் பிரதேச அமைப்பானது ஏறத்தாழ திராவிட நாட்டுப் பிரிவினைமுறையில் அமைக்கப்படுமானால் அதனை எதிர்க்க தி. மு. கழகம் துணியாது. அந்த அளவுக்கு அரசியல் அப்பாவிகளுமல்ல தி. மு. கழகத்தினர்.

தி. மு. கழகம் வலியுறுத்தி வரும் திராவிட நாட்டுப் பிரிவினை அமைப்பானது:

(1) மத்திய சர்க்காரின் எல்லா பிடிப்புகளிலிருந்தும் அறவே விடுபட்ட தனி அரசாக இயங்க வேண்டும்.

(2) அத்திராவிட நாட்டுக் கூட்டாட்சியில் பங்கு கொள்ளும் தமிழகம், ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய நான்கு மாநிலங்களும் மொழி வழி அடிப்படையில் தனித்து இயங்கி, பாதுகாப்பு போக்கு—வரத்து போன்ற முக்கிய பிரச்னைகளுக்கு மட்டும் இந் நான்கு நாட்டுப் பிரதிநிதிகளும் சேர்ந்த கூட்டாட்சிமூலம் ஆவன செய்யப்பட வேண்டும்.

(3) மொழிவழி அடிப்படையில் அமையப் பெறும் இந் நான்கு மாநிலங்களிலும் அந்தந்த மொழியே ஆட்சிமொழியாகவும், நான்கும் சேர்ந்த கூட்டாட்சியில் அகில உலக நாடுகளிலும் ஏறத்தாழ பொதுமொழி போன்று கருதப்பட்டும், பயன்படுத்தப்பட்டு வரும் மொழியை ஆட்சி மொழியாகக் கொள்வது.

(4) திராவிட நாட்டுக் கூட்டாட்சியில் இடம்பெறும் மொழி வழி மாநிலங்கள் கூட்டாட்சிக்கு ஒதுக்கப்படும் பாதுகாப்பு போன்ற முக்கிய இலாக்காக்களைத் தவிர மற்ற அனைத்திலும் (வரவு—செலவு உள்பட) உரிமையுடன் இயங்கிவரச் செய்வது.

(5) திராவிட நாட்டுக் கூட்டாட்சிக்கு ஆகும் செலவுகளுக்காக அக்கூட்டாட்சிக் குழுவினரே நேரடியாக இம்மாநிலங்களில் சில வரிகளை வசூலிப்பதென்றில்லாமல் அதற்காகும் மொத்த செலவுகளைப் பகிர்ந்து அந்தந்த மாநிலங்களின் வரவு—செலவுக்கேற்ற முறையில் சந்தாபோல செலுத்தச் செய்வது.

(6) திராவிட நாட்டுக் கூட்டாட்சிக் குழுவில் அங்கம் வகிப்பவர்கள்கூட அந்தந்த மாநில அரசினரின் நேர்பார்வையில் அனுப்பப்பட வேண்டும்.

(7) திராவிட நாட்டுக் கூட்டாட்சியில் இடம் பெறும் மொழி வழி மாநிலங்கள் ஏதாகிலும் ஒன்று அதினின்று பிரிந்து போய் தனித்தியங்க வேண்டுமென்று வற்புறுத்தினால் அவ்வித எண்ணத்துக்கு கூட்டாட்சி தடையாய் நிற்காது.

(8) அகில உலக நாடுகளின் அவையில் திராவிட நாட்டுக் கூட்டாட்சி சார்பில் நேரடியான தொடர்பும் இடமும் பெறுவது.

(9) மதம், ஜாதி, பிறப்பு ஆகியவைகளை முன்வைத்து மனிதனுக்கு மனிதன் ஏற்றத் தாழ்வு கொள்வது, தனிச் சலுகைகள் பெறுவது போன்ற அநீதிகளை அறவே அகற்றுவதென்ற பொதுக் கொள்கையை மலரச் செய்வது.

(10) கூடுமான எல்லா வழிகளிலும் தனி உடமை வளர்ச்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து அத்தனி உடமை வளர்ச்சியில் ஆற்றலைச் செலவிட்டு வந்த சக்திகளை உண்மையான பொதுவுடமை மலர்வதற்கான வழிகளில் பயன்படுத்தச் செய்வது. குறிப்பாக திராவிட நாட்டின் பண்பு, பழக்க வழக்கம், கலாச்சாரம் ஆகியவைகளை அடிப்படையாக வைத்து பொதுவுடமையைத் தழைக்கச் செய்வது.

ஆக இவ்வித கொள்கைகளை ஏறத்தாழக் கொண்டு தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படுமானால் தி. மு. கழகம் அதனை மனதார வரவேற்பது மட்டுமல்ல; நேருபண்டிதருக்கு திராவிடத்திலென்றென்றும் தனிச்சிறப்பு இருக்கவும் ஆவன செய்யும்.

ஆனால் இன்று அமைக்க யிருப்பதாகக் கூறப்படும் தட்சிணப் பிரதேசம் (ஆந்திரம் நீங்கலாக) சென்னை மாநிலம் அல்லது தென்னாடு இப்போதுள்ள அரசியல் சட்டப்படியே மத்திய சர்க்காரின் பிடிப்பில் சிக்குண்டுதானிருக்கும் என்று வெளிப்படையாகத் தெரிகிறது. எனவே இந்நிலையில் தட்சிணப் பிரதேசம் என்பதை அரசியல் யூகம் படைத்த தி. மு. கழகம் ஆதரிக்க முடியுமா என்பதை கேள்வி கேட்ட நண்பர் தயவு செய்து சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நான் மேலே எடுத்துக் காட்டியுள்ள அமைப்புப்படி திராவிடம் இயங்கப்படுமானால் தட்சிணப் பிரதேசம் என்றல்ல வேறெந்த பெயரிட்டழைத்தாலும் அதை ஏற்றுக் கொள்ளுமாறு தி. மு. கழகத்தை வேண்டிக் கொள்ளலாம். பெயரைப் பற்றிக்கூட அல்ல இன்றுள்ள பேதாபேதம். நடைமுறையில் கடந்த எட்டு ஆண்டுகளாகவும் அதற்கு முன்பு பரங்கியர் ஆட்சியின் போதும் தென்னாடு நடத்தப்பட்டு வரும் விதத்தையும் அதனால் ஏற்பட்டுள்ள விளைவுகளையும் ஆதார பூர்வமாக எடுத்துக் காட்டியே தனி உரிமை கேட்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

எனவே "குதிரைக்கு குர்ரம் என்றால் யானைக்கு அர்ரம்" என்றிருக்கும் என்று தானாகவே கருதிக் கொண்ட 'நிபுணனை'ப்போல கேள்வி கேட்ட தோழர் தட்சிணப் பிரதேசக் கூப்பாட்டினையும் தி. மு. கழகம் வலியுறுத்தி வரும் திராவிட 'ாட்டு அமைப்பு முறையையும் ஒன்று சேர்த்து குழப்ப வேண்டாம் என்பதை எடுத்துக் காட்டுகிறேன்.

●

கே: எங்கள் நேருஜி உங்கள் அண்ணாதுரையை அழைத்துப் பேசட்டும் என்று அண்ணாதுரையே சொன்னாரே—எங்கள் நேருஜி அழைத்தால் வருவாரா!

— டி. கமலநாதன், சைதை

ப; தோழரே, உங்கள் நேரு பண்டிதரை முதலில் அழைப்பை விடச்சொல்லுங்கள் பிறகு நமது அண்ணா அவர்கள். உங்கள் நேருபண்டிதரைக் கலந்து பேசுவது குறித்து முடிவு செய்யலாம்.

●

திரை அரங்கம்

கோமதியின் காதலன்

●

டி. ஆர். புரொடக்ஷன்ஸ் தயாரிப்பு

நேஷனல் பிக்சர்ஸ் வெளியீடு.

●

இக்கதை — பத்திரிகையில் வெளிவந்து பலர் படித்தும்—நாடக ரூபத்தில் பல மேடைகளை ஏறியதுமாகும்.

* முல்லைவாசல்—சின்னவேலி நிலப்பிரபுக்களிடையே நீண்ட நாள் பகை! ஆனால் முல்லைவாசல் நிலப்பிரபுவின் மகளும். சின்னவேலி ஜமீன்ன் இளைய மகனும் ஒருவரை யொருவர் காதலித்து வந்ததினால் அந்தத் தீராபகை இருந்த இடம் தெரியாமல் மறைந்தது—இதுதான் கதையின் சாரம்!

கதை அமைப்பில் அவ்வளவாக விறுவிறுப்பு இல்லை. எனவே முதல்தரமான வெற்றிகர படமாக ஓடுவதற்கு இயலாமற் போய்விட்டது.

* நடிகர்—நடிகைகளைப் பொறுத்தவரை பிரமாதமான குறை ஒன்றும் கூறுவதற்கில்லை. தோழர் டி. ஆர். ராமச்சந்திரன் தனக்கே உரித்தான பாணியில் கச்சிதமாக நடித்திருக்கிறார். ஆனால் அவர் காதல் கட்டத்திலும் அந்தப் பாணியில் நடிப்பது அவர் தாங்கியுள்ள பாகத்தின் தன்மையைச் சற்று குறைபடுத்துவதா யிருக்கிறது.

தோழியர் சாவித்திரி தனது நடிப்பின் மூலம் அனைவரையும்மகிழ்ச்சிக்கடலில் மூழ்க வைக்கிறார். எனினும் தனது நடிப்பின் திறமையை மேலும் எடுத்துக் காட்டும் அளவுக்கு போதிய சந்தர்ப்பம் இப்படத்தில் தோழியர் சாவித்திரிக்கு அளிக்கப்படவில்லையென்பதே ரசிகர்களின் எண்ணமாகும்.

தோழர் தங்கவேலு நடிப்பும் பாராட்டத்தக்கதாகவே யிருக்கிறது. ஆனால் நடிகவேள் எம். ஆர். ராதாவைப்போல நடிக்க வேண்டும் என்பதற்காக "காபி" அடிக்க முயற்சிக்கும் கட்டங்களில் அந்த வித்தை வெளிப்படையாகத் தெரிகிறது.

தோழியர் டி. பி. முத்துலட்சுமியின் பேச்சு, நடிப்பு அனைத்தும் மிகமிக பாராட்டக் கூடிய வகையில் உள்ளது.

மற்றும் சாரங்கபாணி, பிரண்ட் ராமசாமி, பி. எஸ், ஞானம், எஸ். ஆர். ஜானகி. ஆர். பாலசுப்ரமண்யம், பி. டி. சம்பந்தம், சிவ சூரியன், கே. டி. சந்தானம், டி. பாலசுப்ரமண்யம் ஆகியோரும் நடித்திருக்கிறார்கள்.

* பாடல்களில் சில—கருத்துநிறைந்ததாகவும், நகைச்சுவை தரக்கூடியதாகவும் அமைந்துள்ளன.

காதலியைக் காதலன் சிறப்பித்துப் பாடும்போது "கொங்கு நாட்டு செங்கரும்பே என்று துவங்கி சிவபுரி புகையிலையே என்று புகழ்ந்து பண்ருட்டி பலாப் பழமே என முடியும் பாட்டு ரசிகர்களின் செவிக்கு சிறந்த விருந்தளிக்கிறது. "நீல வான ஆடைக்குள் உடல் மறைத்தே" என்ற புரட்சிக் கவிஞரின் பாட்டு இனிமை தருகிறது.

● டைரக்டர் ப. நீலகண்டன் திரைப்பட உலகில் தனது திறமையை ஏற்கனவே நிலைநாட்டி யிருக்கிறார். இப்படத்தையும் அவர்தான் டைரக்ட் செய்திருக்கிறா. அது மட்டுமல்ல திரைக்கதையையும் வசனத்தையும் அவரேதான் தீட்டியிருக்கிறார். ஆனால் அவரது திறமை இப்படத்தின் மூலம் மேலும் ஒருபடி உயர்ந்தது என்று கூறுவதற்கில்லை. எனினும் சில இடங்களில் வசனமும் அதுபோலவே டைரக்ஷனும் அவருக்குள்ள அபார திறமையை எடுத்துக் காட்டுகிறது.

குறைகள் சில இருப்பினும் கோமதியின் காதலன்—சிறந்த தமிழ்ப் படங்களில் ஒன்று என்பதே ரசிகர்களின் தீர்ப்பாகும்.

—வீரன்

'சட்டத்தின் கண்ணீர்'

18—9—55 காலை 10 மணிக்கு வால்டாக்ஸ்ரோட் 84 எண்ணுள்ள மாளிகையில் 'சட்டத்தின் கண்ணீர்' என்ற நாடகத்தின் துவக்க விழா நடைபெற்றது.

தக்க பக்க வாத்திய இசை விருந்துக்குப்பின், நாடக ஆசிரியர் தன. நடராசன் கடந்த நாடக அனுபவம் குறித்து சொற்பொழிவாற்றியபிறகு எஸ்.எஸ்.தென்னரசு அவர்கள் தலைமை தாங்கி சிறிது நேரம் பேசினார். கோவி. மணிசேகரன் விழாவை துவக்கி வைத்து நாடகக் கலையைப்பற்றி பேசினார்.

சென்னை நகரசபைத் தேர்தல் முடிவுகள்

புதன்கிழமை வரை தெரிவிக்கப்பட்ட விவரங்கள்

வட்டவாரியாக ஒவ்வொரு வட்டத்திலும் வெற்றி பெற்றவர்களை மட்டும் (வெ) என்று குறிப்பிட்டிருக்கிறோம். மற்றவர்கள் தேர்தலில்தோல்வி படைந்தவராக கொள்க.

வட்டம் 1

பி. நடராசன் (காங்கிரஸ்) — வெற்றி
பார்த்தசாரதி நாயகர் (சுயேச்சை)

2

பால்ராஜ் பரமானந்தம் (சு) — வெ
கே. தாமோதரன் (சு)
பாலகிருஷ்ணன் (சு)

3

கே. விநாசன் (சு) — வெ
விக்னேசன் (கா), தியாகராஜன் (சு), பொடிபொரு(சு)

4

வி. சுந்தரமூர்த்தி (கா) — வெ
கே. அர்ஜுனன் (சு), பாபு (கம்யூ)

5

செல்லப்பிள்ளை (சு) — வெ
கருப்பண்ணன் (கம்யூ), ஆதிகேசவலு நாயகர் (கா), மணவாளன் (சு)

6

என். தாமோதரன் (கா) — வெ
ஆர். முனுசாமி, எ. சுப்பராயலுப்தா, வேலாயுதம், வேணுகோபால் (சுயேச்சைகள்)

7

கே. ராமநாதன் (கா) — வெ
கே. ராமலிங்கம் (சு), ராஜரத்தினம் (சு)

8

ஆறுமுகம் (கா) — வெ
பாலசுந்தரம் (சு), முத்துவேல் (சு), கிருஷ்ணசாமி (சு)

9

வி. முனுசாமி (சு) — வெ
டி. தாமோதரன் (கா)
தோழர் முனுசாமி 9-வது வட்ட தி. மு. க. செயலாளர்

10

ஜி. ராஜமன்னார் (பி. சோ.) — வெ
சுல்தான் மொய்தீன் (கா), எம். பாலசுந்தரம், ராதாபிள்ளை, குப்புசாமி (சுயேச்சைகள்)

11 இரட்டைத் தொகுதி

கே. என். சீனிவாசன் (கா), சரஸ்வதி பாண்டுரங்கம் (கா) போட்டியின்றி வெற்றி

12

டி. அஜிஸுதீன் (கா) — வெ
பி. சிட்டன் (சு)

13

வி. ஆர். ராமநாதஅய்யர் (கா) — வெ
போட்டியின்றி தேர்வு

14

டாக்டர் அசைசிங்கரி (கா) — வெ
பி.வி. கோபால், கே. சரவணன் (சுயேச்சைகள்)

15

டாக்டர் சாமி [கா] — வெ
போட்டி யில்லை

16

எம். கே. நாகேந்திரன் (சு) — வெ
வி. கே. செங்கல்வராயன் (கா)
குப்பைநாதன் (சு)

21

பி. இ. பக்தவத்சலம் (சு) — வெ
ஜீ. லோகநாதன் (கா)
தோழர் பக்தவத்சலம் செ. மா. தி. க. துணைத் தலைவர்

22

செல்லமய்ய நாயுடு (கா) — வெ
எம். பாலசுப்ரமண்யம், எ. கே. சாமி, இன்பக்கடல் (சுயேச்சை)

23

டி. எஸ். கோவிந்தசாமி (கா) — வெ
போட்டியில்லை

24

எஸ். ஸி. ஸி. அந்தோணிப்பிள்ளை (சோஷ) — வெ
எம். எஸ். சிரிகோரி (கா)
எஸ். வாசு (சு)

25

எம். ஆர். அப்பாதுரை (கா) — வெ
கே. ராசாராம், கே. பி. சுந்தரம் (சுயேச்சை)

26

சுந்தரராஜ (சு) — வெ
கே. மதனகோபால், வரதராசலு, பூங்காவனம் (சு)

27

எம். பார்த்தசாரதி (சு) — வெ
நமச்சிவாய பாரதி (சு)

28

பி. ஈ. ராகவ செட்டி (கா) — வெ
கடிகாசலம், பாஷ்யம் செட்டி (சுயேச்சை)

29

அ. பொ. அரசு, (சு) — வெ
சஞ்சீவி நாயுடு (கா)
சி. ஏகாம்பரம் [சு]
தோழர் அ. பொ. அரசு 29-வது வட்ட தி. மு. கழகச் செயலாளர்

30

சி. வி. திருவேங்கடம் [கா] — வெ
பி. எ. மூர்த்தி, கே. பொன்னுரங்கம் [சு]

31

சம்பத்து [கா] — வெ
டி. வேணுகோபால், எம். எஸ். அப்துல்காதர், டி. அருள்ராஜ, டி. காந்தாராவ் [சு]

32

டாக்டர் சந்தோஷம் [கா] — வெ
ஆர். நாகராசன் [சு]

35

கே. விநாயகம் எம். எல். எ. [சு]— வெ
எஸ். அற்புதராஜ [கா]
ஜேசுபாதம் [சு]

36

எஸ். கிருஷ்ணமூர்த்தி [சு] — வெ
கே. அருணாசலம் [கா]

37

கே. கமலக்கண்ணன் [கா] — வெ
அரசு [சு]

39

தவுலத்ராம் [கா] — வெ
முன்வர் உசேன், மன்னுலால், மவுலானா [சு]

41

என். இ. ரகுநாதன் [கா] — வெ
போட்டியில்லை.

42

எம். எம். எம் ஹயாத் [சு] — வெ
எ. எம். கந்தசாமி [கா]

43

டாக்டர் சரீம் [சு] — வெ
கே. வி. கந்தசாமி, டி. ஜே. ஆர். கோபால், பாலசுந்தரம், எ. ஆர். வி. ஆச்சார் [சு]

44

பி. எஸ் செட்டியார் [சு] — வெ
முகம்மத் இப்ராயீம் [கா]
பாலசுந்தர முதலியார [சு]

46

டி. எம் சண்முகம் [சு] — வெ
டி. எஸ். பெருமாள் [கா]
தோழர் சண்முகம் சென்னை மாவட்ட தி. க. செயலாளர்

47

கே எம். சுப்ரமண்யம் [கா] — வெ
எம். சீனிவாசலு [சு]

48

எம். கன்னியப்பன் [க] — வெ
என். டி. சண்முகம் [சு]

49

நரசிம்மராவ் [கா] — வெ
எம். வி. கணபதி, எம். கோபால், எ. அற்புதராசன் (சு)

50

எ. ஜி. ஆதிமூலம் [கா] — வெ
எஸ். எம். முத்து, டி. ஆறுமுகம் [சு]

ரயில்வே தொழிற் சங்கத் தொகுதி

எஸ். எ. மகாலிங்கம் [சு] — வெ
சி. செங்கல்வராயன் [சு]

பஞ்சாலைத் தொழிலாளர்த் தொகுதி

சி. கே. நாராடணன் [சோஷ] — வெ
கே. ஆர். ரங்கநாயகலு [சு]

சங்கங்களைச் சாராத தொழிலாளர்—வடக்கு

சி. கோவிந்தராசலு [கா] — வெ
வி. ராமகிருஷ்ணன் [சு]

மேற்படி—தெற்கு

பி. என். லட்சுமிபதி [கா] — வெ
என். கிருஷ்ணமூர்த்தி [சு]

●

28-9-55 வரை எண்ணிக்கைபடி கட்சிகளின் நிலை

காங்கிரஸ்	...	28
சோஷலிஸ்ட் முன்னணி	...	2
பி. சோ. கட்சி	...	2
சுயேச்சை	...	15
கம்யூனிஸ்ட்	...	0

(போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட 7 காங்கிரஸ்காரர்களும் இதில் அடங்குவர்) விடுபட்டுள்ள தொகுதிகள் அனைத்தும் இரட்டை உறுப்பினர்களைக் கொண்டதாகும். அவைகளின் எண்ணிக்கை 29-ந்தேதி காலை துவங்கும். விவரம்அடுத்த வாரம் வெளியிடப்படும்

திருமணம்

மேடை வலசு மே சி. சிதம்பரனார் அவர்களின் பேர்த்தி பருவதாம்பாளுக்கும் சின்னம்மன் கோவிற்பாளையம் மு. கிருட்டணசாமிக்கும் 4-9-55ல் பழனி அடிகள் சிவநேசம் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

செய்திகள்

சீராமபுரம்,—பெங்களூர்

கலா நாடக மன்றத்தின் நடிக கூட்டம் கடந்த 25-9-55 அன்று துணைத்தலைவர் திரு பி. ஆர். நாகராசன் தலைமையில் கூடியது நாடகாசிரியர். திரு. ப. செல்வராசன் மன்றம் கடந்த ஐந்தாண்டுகளாக மக்களிடையே செய்து வரும் நாடகத் தொண்டை பற்றியும், இனிமேற் கொண்டு கன்னட தமிழ் நூல் நிலையம் ஒன்றை அமைத்து அதன் மூலம் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு பணியாற்ற வேண்டியதை குறித்தும் விளக்கிப் பேசினர், மன்றத்தின் ஆண்டு விழாவை வரும் நவம்பரில் கொண்டாடுவதென்றும், நடித்து முடித்த ''பிணக் காடு'' நாடகத்தின் நிகரலாபத்தைக் கொண்டு புத்தகங்களை வாங்குவதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

மேலப்பாளையம்

தி. மு. கழகத்தின் சார்பில் 23-9-55 இரவு 8-மணிக்கு பசார் மைதானத்தில் திரு நா. சங்கரலிங்கம் அவர்கள் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது திருவாளர் ச. வீரபாகு அரும்புக் கோட்டை எம். எஸ். இராமசாமி ஆகியோர் திராவிடம் பிரிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியும், அதற்கான காரணங்களை விளக்கியும், தி. மு. கழகத்தின் 7-ஆண்டுப்பணி குறித்தும் விரிவாக சொற்பொழிவாற்றினர்.

காதக்கோட்டை

23-9-55 மாலை 6-மணிக்கு காதக்கோட்டை தி. மு. கழகத்தின் சார்பில் நாட்டு பிரிவினை விழாவும் ஏழாவது ஆண்டு விழாவும் துணைச்செயலாளர் கே. பி. சுந்தரம் தலைமையில் கொண்டாடப் பட்டது. தி. மு. க. வின் ஆறு ஆண்டு கால பணியை விளக்கி தோழர்கள் ந. சின்னமுத்துசாமி கே. என். குப்புசாமி எ. எஸ். சோமு பேசினர்.

திருமழிசை

24-9-55 மாலை 6 மணிக்கு மேல் திராவிட நாடு பிரிவினை வாரமும் தி மு. கழக 7-வது ஆண்டு துவக்கு விழாவும் திருமழிசை தி. மு. க. இரண்டாவது ஆண்டு விழாவும் தோழர் டி. கே. போரூரான் தலைமையில் நடைபெற்றது. டி. சண்முகம் எம். எல். எ. தோழர் குன்றத்தூர் டி. என். சம்பந்தம் தோழர் ரஷீத், தோழர் டி. கே. சீனுவாசன் ஆகியோர் பேசினர். அதுசமயம் திராவிடநாடு பிரிய வேண்டியதன் அவசியத்தையும் அதன் காரண காரியத்தையும் விளக்கி இன்று தி மு. கழகம் மக்களிடம் பெற்றுள்ள செல்வாக்கையும் நடத்த வேண்டிய போராட்டங்களின் பொறுப்புக்களையும் விளக்கிப் பேசினர்.

3-வது வட்டம்

தி. மு. க. கிளை சார்பில் ஏழாவது ஆண்டு விழாவும், நாட்டுப் பிரிவினை வாரமும் சிறந்த முறையில் கொண்டாடப் பட்டது. வட்டத்தின் முக்கியத் தெருக்களில் தோரணங்கள் கட்டி 16-9-55 மாலை 6-மணிக்கு பாண்டியன் திடலில் தோழர் டி. எஸ். வேலன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்தில் தோழர் இளம்பரிதியும், நாஞ்சில் மனோகரனும் கலந்து விழாவை சிறப்பித்தனர் தோழர் கி. மனோகரன் நாட்டு பிரிவினையைக் குறித்து நீண்டதோர் உரையாற்றினர். திராவிட நாட்டுப் பிரிவினை தீர்மானமும் நிறை வேற்றப்பட்டது.

அவ்வமயம் பழையகோட்டைபட்டக்காரர் எம். எல். சி. அவர்களும் தாராபுரம் ஏ. சேனாபதி எம். எல். எ. அவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் அறிவியக்கத்தோழர்களும் வந்தமர்ந்து வாழ்த்துரைகளும் சொற்பொழிவுகளும் அன்பளிப்புகளும் வழங்கினர், மணமகள் பருவதம் வந்திருந்த அனைவர்கட்கும் நன்றி கூறத் திருமணம் இனிது நிறைவேறியது, திராவிடன் வளர்ச்சி கருதி ரூ. 2 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

இந்தியரே வெளியேறுங்கள் என்ற துவேஷ பிரச்சாரத்திற்கு கண்டனம்

நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு வேண்டுகோள்.

அண்ணா பகுத்தறிவு மன்ற ஆண்டு விழாவில் கோரிக்கை

●

கொழும்புவிலும் பல முக்கிய நகரங்களிலும் தமிழரை துவேஷித்து சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் சுவர்களில் எழுதியிருப்பதை கண்டிப்பதுடன் இதனால், தமிழர் அவமதிக்கப்படுவார்கள் என்பதை அரசாங்கத்திற்கு தெரிவித்துக் கொள்கிறோம். என வெள்ளவத்தையில் நடைபெற்ற அண்ணா பகுத்தறிவு மன்ற ஆண்டு விழாவில் தீர்மானிக்கப்பட்டது. ஆயிரக் கணக்கான மக்கள் குழுமி யிருந்தார்கள். விழாவிற்கு திரு உமர் தலைமை வகித்தார்.

வெள்ளவத்தை அலுத்தியா கல்லூரி மண்டபத்தில் வள்ளுவர் அரங்கில் அண்ணா பகுத்தறிவு மன்ற முதலாண்டு நிறைவு விழா லிங்கம் சகோதரர்கள் இன்னிசையுடன் ஆரம்பமாகியது.

கூட்டத்தினரை வரவேற்று திரு. எம். எஸ். குமார் பேசினார். அடுத்து திரு. வை. மு. அழகேசன் ஆண்டறிக்கையை வாசித்தார். அறிஞர் அண்ணா படத்தை திறந்து வைத்து டி. எம். பீர் முகம்மது பேசியபின், இ. தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. அதி மணி அவர்கள் 'இலங்கையில் நாங்கள் துவேஷப் பிரச்சாரம் செய்யவில்லை என்றும் தங்களை நாஸ்திகர்கள் என்று கூறுவதை கண்டித்தும் சிறந்ததோர் சொற்பொழிவாற்றினார். அடுத்து தோழர்கள் நா பழனிநாதன், 'தமிழகம்' ஆசிரியர் செ. இராசதுரை, கந்தசாமி, பி. யோ. தேவதாசன், சி. தலுவத்தை ஆகியோர் பேசினார்கள்.

செல்வி விஜயலெட்சுமி இராஜேந்திரம், செல்வி செல்வநாயகி நாராயணசாமி இவர்களுடைய நடனம் நடைபெற்றது.

தலைவர் நன்றியுரையுடன் பல தீர்மானங்கள் நிறைவேறின.

இலங்கை தி. மு. க.

இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொழும்புக்கிளையின் செயற்குழுக் கூட்டம் கழகப்பணி மனையில் 20–9–55 அன்று துணைச் செயலாளர் வி. எஸ். முருகன் தலைமையில் நடைபெற்றது.

செயற்குழு உறுப்பினராக தோழர் கே. அப்துல்ரகுமான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். பின்னர் கீழ் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின

நவம்பர் இறுதிக்குள் நடத்தப் படவிருக்கும் ஆண்டு விழாவில் கவிஞர் கண்ணதாசன், ''தம்பி'' ஆசிரியரும் சிறந்த சொற்பொழி வாளருமாகிய தில்லை வில்லாளன் எம். ஏ. தமிழகம் ஆசிரியர் இராசதுரை, எ. அமிர்தலிங்கம் ஆகியோர்களைக் கொண்டு சிறப்பான முறையில் ஆண்டு விழா நடத்துவதென்று முடிவு செய்யப் பட்டது.

ஆண்டு விழா நடவடிக்கைகளை கவனிக்க தோழர் பா. ச. கீதம். நா. பழனி நாதன் ஜே. சோமசுந்தரம் பாலசிவந்திராசன் பி. எஸ். ஏ. கனி, ஜேம்ஸ் ஆகியோர்களைக் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டது தலைவர் நன்றியுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

*

இ. தி. மு. கழகத்தின் செயற்குழுக் கூட்டம், கடந்த 11–9–55 அன்று கழகப்பணிமனையில், பொதுச் செயலாளர் இரா. அதி. மணி அவர்கள் தலைமையில் நடைபெற்ற போது கீழ் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:

காலியான ஸ்தானங்களுக்கு கீழ் கண்டோர்கள் தேர்தெடுக்கப் பட்டனர். துணைச்செயலாளர்கள்: அ. ம. அந்தோணிமுத்து. கே. சோமசுந்தரம். செயற்குழு உறுப்பினர்கள்: வி. எஸ். முருகன். ஜே. சோமசுந்தரம். கே. சோமசுந்தரம். நா. பழனிநாதன் பொருளாளர்: பா. ச. கீதம்.

பொதுக்குழு கூடுவதற்கான காலத்தையும் இடத்தையும் ஒழுங்கு செய்து அறிவிக்கும்படி பொதுச் செயலாளர் அவர்களைக் கேட்டுக் கொண்டது.

இலங்கை திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில், இலங்கையில் தொழிற் சங்கம் நிறுவுவது பற்றி ஆராயப்பட்டு அதைப்பின்னர் பொதுக் குழுவில் முடிவு செய்வதென தீர்மானிக்கப் பட்டது.

சிலோன் தியேட்டர்ஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளிக்குமுகமாக, இதுவரை பொதுச் செயலாளர் அவர்களால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஆதரித்தும் சுற்றறிக்கை மூலம் கிளைக்கழகங்களுக்கு அறிவித்து தொடர்ந்து ஆதரவை அளித்து வருவதென்று தீர்மானிக்கப் பட்டது.

இலங்கை இந்தியர் பிரச்சனை சம்மந்தமாக இலங்கை ஜனநாயக காங்கிரசால் எடுக்கப்பட்டு வரும் பயனற்ற நடவடிக்கைகளால், நிலைமை சீர் குலைந்து வருவதாக இச்செயற்குழு கருதுகிறது எனவே முக்கூட்டு மாநாடு கூடிப்பேச வேண்டுமென்று இ. ஜ. காங்கிரஸ் தலைவர் திரு. அஜீஸ் கூறுவது அர்த்தமற்றது என்றும், இது முற்றிலும் உள்நாட்டு பிரச்னையாகயிருப்பதால், இப்பிரச்சனைக்கு ஆதரவு நல்கும் அத்தனை சக்திகளையும் ஒன்று சேர்த்து அரசாங்கத்திடம், உரிமைக்காக போராடவேண்டும் எனதீர்மானிக்கப்பட்டது.

கொள்ளுப்பிட்டி கிளை

இலங்கை தி. மு. கழக கொள்ளுப்பிட்டி கிளையின் ''எங்கே நீதி!'' என்ற நாடக ஆரம்ப விழா கடந்த 17–9–55 மாலை 4–மணிக்கு கொள்ளுப்பிட்டி மார்சல் எலிமென்றி பாடசாலை மண்டபத்தில் திரு. சு. கா. சுந்தரராசன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன. கொழும்புகிளை, பொரளைகிளை, கிராண்பாஸ்கிளை, அண்ணா பகுத்தறிவு மன்றம், அழகிரி மன்ற நிர்வாகிகளும், பிரமுகர்களும் வருகைதந்து விழாவை சிறப்பித்தார்கள்.

துணைச்செயலாளர் ஞா. ஜோன்சாமிதாசன் வரவேற்புரை நிகழ்த்தினார், இலங்கை தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. அதி மணி விழாவை ஆரம்பித்து வைத்து நீண்ட விரிவுரை நிகழ்த்தினார்கள். இ. தி. மு. க. துணைச் செயலாளர் அ. ம, அந்தோணிமுத்து சிறப்புரை ஆற்றினார்,

நாடகக்குழு செயலாளர் எம் அன்பரசன் நன்றியுரையுடன் விழா சிறப்பாக முடிவுற்றன.

பம்பாய்

பொய்சேர் தி. மு. க.

திராவிடநாடு பிரிவினைநாள் பொதுக் கூட்டம் 19—9—55 மாலை 6–30 மணிக்கு கழகப் பணிமனை அருகாமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பொய்சேர் தி மு. க. செயலாளர் சி. இரா. அதிவீரன் தலைமை வகித்தார். இரா. மா. சண்முகராசன் திராவிடப் பண்பாட துணைச்செயலாளர் எம். இ. சேகர் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். பம்பாய் மாவட்ட செயலாளர் எஸ். தியாகராசன் கழகக் கொடி ஏற்றிவைத்து இறுதியில் பேசினார். திராவிட நாடு பிரிவினையையும், திராவிட முன்னேற்றக் கழகம் 6 ஆண்டு செய்த சேவையையும் குறித்து பொது மக்களுக்கு ஆதாரத்தோடு மலாடு செயலாளர் டி. எ, அழகுமுத்து து. சே. அருணாசலம், இரா. மா. சண்முகராசன் த. மு. பொற்கோ ஆகியோர் சொற்பெருக்காற்றினார்கள் தலைவர் முடிவுரைக்குப்பின் துணைச் செயலாளர் எம். இ. சேகர் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

அந்தேரி

பிரிவினை வாரமும், ஏழாம் ஆண்டு விழாவும் 19–9–55 காலை 9 மணியளவில் கோல்டுங்கரி பணிமனையில் வைத்து தோழர் வி. துரைராஜ அவர்கள் தலைமையில் நடைபெற்றது அதுசமயம் செயலாளர் தோழர் எல். எம். பாண்டியன் அவர்கள் கூட்டத்தை துவக்கி வைத்து பிரிவினைவாரமும், ஆண்டுவிழாவும் குறித்து பேசினர். பின்னர் தலைவர் தலைமையுரைக்குப் பின் தோழர்கள் எஸ். கணேசன், எஸ். முத்து. ர. முக்தையா எஸ். துரைராஜ பி. அவ்வி ஆகிய தோழர்கள் பேசிய பின்னர் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்படடு தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றி நவிலகூட்டம் பகல் 11–30மணிக்கு இனிது முடிந்தது திராவிட நாட்டுப் பரிபிரிவினையை வலியுறுத்தி திர்மானம் ஒன்று நிறைவேறியது.

அரசுநிலையம்

20—9—55 மாலை 4–மணிக்கு அரசு நிலையம் திராவிட முன்னேற்றக் கழக துவக்க விழாவையொட்டி செயலாளர் மருதை அவர்களின் தலைமையில் ஊரின் முக்கிய பகுதி வழியாக ஊர்வலம் புறப்பட்டு சுமார் 5–30 மணிக்கு பொதுக்கூட்ட மைதானத்தை வந்தடைந்தது. பொதுக்கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் கூடி யிருந்தனர். செயலாளர் தலைமையில் ஐ. என். பழனியப்பன், எம். ஆறுமுகம் எம். கே. ஷான்னம்பலம் எஸ், ஆறுமுகம் ஆகிய தோழர்களின் சொற் பெருக்காற்ற லுடன் ஆர். கே. கங்கராசன் அவர்களால் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. முத்துமாணிக்கம் குழுவினரின் இன்னிசை வாத்தியத்துடன் விழா முடிவுற்றது.

பாலைவன ரோஜா... தொடர்ச்சி

தும் வல்லூறாக மாறாதே தேனிலே—விஷங்கலப்பவர் யார்?

ரா: அந்த வஞ்சகர்கள்தான்—மனித உடல் போர்த்திய இருதயத்துக்குள்ளே கொடும் புலியை ஒளித்து வைத்திருக்கிறார்களே ......அந்த குணக்கேடர்கள்தான்!

மூ: ஆசையும்-பாசமும் அழகு வார்த்தைகளோடு மட்டு மல்ல இந்த அன்பு இதயத்தோடும் ஒட்டிக் கிடக்கிறது. நிழலாடும் உன்னை நினைவாக்கி வைத்திருக்கிறேன் என் நெஞ்சில்...காலத்தாலோ கொடு நெஞ்சக்கள்ளர்களாலோ கவர முடியாத ஒப்பற்ற மாணிக்கம் நீ. என் இதயக் குகையிலே ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் உன்னை யாராலும் பிரித்து விடமுடியாது கண்ணே!

ரா: அன்பான அத்தான்! வாழ முடியாத சமுதாயத்திலே சாகத்தெரியாதவர்களாகப் பிறந்திருக்கிறோம், வேதனைப் பொம்மையை நமக்கு விளையாடத் தருவதில் தானே காலத்துக்கு விருப்பம். பாவலனும் பாடினானே—நாமுந்தான் காத்திருப்போம்.

மூ: ஆமாம் அன்பே! காத்திருப்போம் சிக்குகள் அறுபடும் சங்கடங்கள் சாய்ந்து விடும். வாழ்வு வானத்திலே புது நிலா தலை தூக்கும்.

ரா: அத்தான்......கண்ணீரா?

மூ: தமிழ்ப் பெண்ணே! என் வாழ்வுக் கண்ணே! கண்ணீர் கண்டு கலங்காதே! வேதனையில் தான்—இன்பம். கசப்பான மருந்தை நோயாளி குடித்துத்தானே தீருகிறான். அந்தக் கசப்பு வாழ்வின் இனிப்பாகத்தானே அமைகிறது.

(கனவு மாளிகையை விட்டு வெளியே வருகிறாள் ராஜம். அந்த நினைவுகள்......படையெடுத்து படாதபாடு படுத்துகின்றன. (அடுத்த வாரம்)

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ்: 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதறாஸ்–1
பார்சல் ஆபீஸ்: 148, தங்கசாலைத் தெரு, சென்னை–1

மதறாஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப் பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி; கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்;

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
,, 103–1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
,, கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருநகர்
,, வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

களங்கம் கப்பலேறுகிறது!

ச. வெ. பாண்டியன்

அவமானச் சின்னம் அது!

எது? திருட்டுத் தனத்திலே ஒரு தாய் பெற்றெடுத்த குழந்தையைத் தானே குறிப்பிடுகிறாய் என்று கேட்காதீர்கள்! தவறான முறையிலே பிறக்கப்படும் குழந்தையைப் போல தமிழிலே 'தறுதலை' ஒருவனால் பிறக்கப்பட்டிருக்கும் கம்ப ராமாயணத்தைத் தான் கூறுகிறேன்; தமிழிற்கு—தமிழ் நாட்டிற்கு அவமானச் சின்னம் என்று!

தமிழ் பண்பிற்கு — தமிழ் மணத்திற்கு அப்பாற்பட்ட கதை இராமாயணம்! தமிழனைத் தாழ்த்திய நூல் இராமாயணம்! இராமனின் மேதாவிலாசங்களை அனுச்சாரமான முறையிலே பரவவிட்டு —மக்களை இராமதாசர்களாக்கி கருத்துக் குருடர்களாக்கிய நூல் இராமாயணம்!

வீரத்திற்கு அழகு மறைந்திருந்து தாக்குதல், அறவோனுக்கழகு குற்றமற்றவனைக் கொல்லுதல், நற்கணவனுக் கழகு கொண்டவளை எடுத்த எதற்கும் சந்தேகிப்பது, உலக நடப்புக் கழகு அண்ணன் இருக்க தம்பி திருட்டுத் தனமாகப் பட்டம் சூட்டுதல், ...இத்தியாதி பண்புகளை(!) யெல்லாம் பாருக்குக் காட்டிடும் மாகாவியம் இராமாயணம்!

தமிழ்க் கலாச்சாரத்திற்கே கிஞ்சித்தும் கிட்டே ஒட்ட முடியாத போக்குகளைக் கொண்டது! முழுக்க முழுக்க ஆரியர் பண்பாட்டின் பாற்பட்டது!

அண்ணன் செங்குட்டுவனே முறைப்படி சேர நாட்டை ஆள வேண்டியவன்! அவையில் புகுந்த துறவி தம்பி இளங்கோ தான் நாட்டை ஆள்வான் என்று ஆருடம் கணிக்கிறான். வெகுண்டெழுகிறான் அண்ணனல்ல—தம்பி! "என்னே முறைகெட்ட தனம் இது? இது நெறியாகுமா? ஒருக்காலும் அண்ணனிருக்கும்போது தம்பி அரசபீட மேறமாட்டான்! இது எமது நாட்டுமுறை! இதோ நான் துறவியாகிறேன்! அண்ணன் நன்றாக ஆளட்டும்—ஆள வேண்டும்! என்றுகூறி துறவறம் புகுகிறான் தம்பி இளங்கோ! இது தமிழ்ப் பண்பு!

முறைப்படி மூத்தவன் பரதன்! எதிர்கால அயோத்திக்கு அவன் தான் அரசனாக வேண்டியவன்! ஆனால் தந்தையோ மூத்தவனான பரதனை பாட்டனார் வீட்டிற்கு அனுப்பிவிட்டு கள்ளத்தனமாக அவன் தம்பி இராமனுக்குப் பட்டம் சூட்ட முனைகிறான்! இராமன் அப்போக்கு கண்டு மறுக்கவும் இல்லை! மறுமொழி பேசவும் இல்லை! இது இராமத் தம்பியின் பதவிப் பித்தைதானே காண்பிக்கிறது! இதுதான் அசல் ஆரிய—வடநாட்டுப் பண்பு!

தமிழகப் பெண்களைப் பழித்தான் கனகன்—விசயன் என்னும் வடவன் என்று கேள்விப்பட்டதும் வேங்கையென வீரிட்டுப் பாய்ந்தான்! வடவாரியரை—பெண்களை இழித்துப் பேசியோனை அடக்கினர்: அதோடு விடவில்லை சுடுசொல் வீசியோனை கல்சுமக்கச் செய்து பத்தினிக்குச் சிலை செய்தான். இது 'அன்று வீசினார் சுடுசொல்! பின் சுமந்தார் கல்' என்று மனத்தில் நமக்குள்ள அக்கரையை உலகுக்கு காட்டிக் கொண்டிருக்கிறது!

அயோத்தி மன்னன் இராமனின் மனைவி சீதை! சீதையிடம் இராவணன் சுடுசொல் வீசவில்லை —தூக்கிக் கொண்டே போய்விட்டான்! கடைசியில் அனுமான் மூலம் சீதை எங்கு இருக்கிறாள் என்பதை அறிந்தும் பாய்ந்தானா இராவணன் மேல்! இல்லை! நாள், கோள், ஆள் பார்த்துக் கிடந்தான் இராமன்! சீதையை மீட்பதில் உதவி புரியும்படி சுக்ரீவனிடம் ஒப்பந்தம் பேசி நல்லவனும் வாலியை வதம் செய்கிறான்! மனைவியை அடக்க முடியாதவன் பானை சட்டியைப் போட்டு உடைத்த கதையைப் போல் தானே இருக்கிறது! வடவரின் சூடு சொரணையையா காட்டுகிறது!

இப்படி எத்தனையோ இழிதகைகளை—வடவருக்கே உரித்தான வடிகட்டின வறண்ட போக்குகளைக் கொண்டு இயங்குவதுதான் இராமாயணம்! இதைவிட தெய்வீகத் தன்மையில் தெவிட்டாத அன்பு கொண்ட அவர்களது குலமுறைக்கு உறைவிடம் இராமாயணம்!

எனவேதான் நாம் இராமாயணம் தமிழிற்கு அவமானச் சின்னம் என்கிறோம்! தமிழ் கலாச்சாரத்தின் பிரதிபலிப்பே கம்ப இராமாயணம் என்று கண்ணை மூடிக் கொண்டு தென்னவரில் பெரும்பாலோர் 'பக்தி' யில் பூஜித்து வந்தாலும் நாம் இது நமக்கேற்பட்ட களங்கம் எனக் கூறுகிறோம்!

ஆங்கிலம் பேசும் ஒருவனை இவன்தான் தமிழ் பேசுவோருக்கு எடுத்துக்காட்டாகக் கூறக் கூடியவன் என்று கூறினால் எப்படி யிருக்குமோ அதுபோல்இருக்கிறது வடவர்க் கலாச்சாரத்தை உள்ளடக்கி யிருக்கும் இராமாயணத்தில் தமிழ்க் கலாச்சாரம் இருக்கிறது—தமிழர் போற்றுவதற்குரியது—தமிழர் பூஜிப்பதற்குரியது என்று எடுத்துக் காட்டுவது! மேனாட்டு உடை உடுத்தியிருப்பவனை தமிழர் உடை உடுத்தி யிருப்பதற் கொப்பாகும் இது என்று கூறுவதைப்போலாகும் இது!

பல அவலட்சணப் போக்குகளைக் கொண்டிருப்பதினால்தான் முறண்பட்ட இராமாயணம் நமக்கு வேண்டாம் என்று கூறுகிறோம்! நம்மை இழிவு படுத்தும் இராமாயணம் — வடவர் கலாச்சாரத்திற்கு அடிமையாக்கும் இராமாயணம் நமக்கு வேண்டாம் என்று கூறி வருகிறோம்!

தமிழிற்கு வேண்டப் படாத ஒவ்வாத போக்கினைக் கொண்ட இராமாயணம் தீயிலிட்டுப் பொசுக்கப்பட வேண்டியதுதான் என்று தீர் கொளுத்தினோம்! ஆகாத ஆண்டவன் தத்துவத்தை கூறி, அருவருக்கத்தக்க அவலட்சணங்களை உள்ளடக்கி ஆரியப் போக்கு ஏராளமாக தூவப்பட்டிருக்கும் இராமாயணத்தை தீயிட்டுப் பொசுக்குகிறோம்!

ஒரு இனத்தின்மேல் ஆதிக்கம் செலுத்துகிற — அடிமையாக்கும் எண்ணத்தை உள்ளடக்கி இறுதியில் வெற்றி கண்டுவிட்ட அவமானக் காதை அது! எனவே தீயிட்டுக் கொளுத்துங்கள்என்று வேண்டினோம்! பரமனுக்குப் பல்லாண்டு பாடி பாராண்ட இனத்தை பகுத்தறிவற்றவர்களாக்கிய நூல் அது! எனவே தீயிட்டோம்!

கம்பன் புகழ்பாடியோரெல்லாம் திடுக்கிட்டனர், வெகுண்டனர்! சிலர் நம்கூற்றிலே உண்மை இருக்கக் கண்டு "கருத்திற்காக இல்லாவிட்டாலும் காவிய ரசனைக்காவது படியுங்கள்" என்று சிபார்சு செய்தனர்! அந்த அளவில் அன்றே நாம் வெற்றி பெற்றோம்! இதோ மகிழ்ச்சியூட்டும் செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது பாருங்கள்!

"கம்பராமாயணம் கி. பி, 12-ம் நூற்றாண்டில் செய்யப்பட்டது. இது முதல்தரக் காவியமாயினும் அக்காலத் தமிழ் மக்களின் பண்பாட்டையோ நாகரீகத்தையோ உள்ளவாறு காட்டுவதாகாது" இப்படி இராமாயணம்பற்றி மீண்டும் 'சர்டிபிகேட்' கிடைத்திருக்கிறது! தமிழேறு டாக்டர் மா, இராச மாணிக்கனார் தான் மேற்கண்ட கருத்துக்கள் சமீபத்தில் மேற் நாடுகளில் இந்திய இலக்கியங்களை மொழிபெயர்த்து வெளியிடும் விடயமாக வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்!

தமிழறிந்த சான்றோர் அல்லவா! கவி முதல்தரமானது என்கிறார் 'நிலை'க்காக! ஆனால் அது கூறும் பண்போ உதவாதது! கூடாதது! என்கிறார். பல்லாண்டுகளாக நாமும் இதைத்தானே கூறிவருகிறோம்! ஆமாம்! தோழர்களே நாம் கண்டிக்கும் ஓதும் காற்புத்தனத்தால் ஏற்பட்டதல்ல—நேர்மைப் பண்பானவை! எனவேதான் நம் கூற்று மெய்யாகிறது இன்று இல்லாவிட்டாலும் சின்னாட்கள் கழித்து என்ற முறையில்!

இப்பண்பு கெட்ட நூல் பாமர மக்களிடம் வெகுவாக பரம்பரை பரம்பரையாக வேரூனறி விட்டது கண்டு வருந்தினோம்! போனது போகட்டும் இனிமேலாவது அறிவைத் தெளிய வைத்து மேலும் அது பரவ விடாமல் செய்வோம் என்ற முறையிலே தொண்டாற்றி வருகிறோம்!

தி. மு. கழகம் ஆற்றியதொண்டால் ஓரளவு மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டு உண்மை வெளிச்சமாகி வருகிறது, இதைக்கண்டு பொறாத சிலர் மேலும் இக்களங்கத்தைப் பரப்ப தீவிர முயற்சி செய்து வருகின்றனர்! செத்து விடுவான் என்று டாக்டர் திட்டமாக ஒரு நோயாளியைக் குறிப்பிட்டுச் சொல்லியும் ஓடோடிக் கொண்டு புரியும் நாட்டு வைத்தியன்போல இவர்களும் செத்துவிடப் போகிற இராமாயணத்திற்கு உயிர் பிச்சை ஊட்டுகின்றனர். இங்குள்ள மக்களிடையேதான் என்பதல்ல கப்பலிலும் அக்களங்கத்தை கரையேற்றி வருகின்றனர்.

அணுகுண்டு ஆச்சாரியார் பலமுறை ரேடியோவிலே பேசித் தீர்த்து விட்டார். இராமாவதாரத்தின் பெருமைபற்றி ஆங்கிலத்தில் வெளி நாட்டவர்களுக்காக! 'கல்கி'யிலும் அந்தத் திருமகனைப் பற்றி கருத்துக் காகாத வகையில் எழுதி வருகிறார்! கனம் கே. எம். முன்ஷியோ மேல்நாட்டு சஞ்சிகைகளிலும், வடநாட்டு ஆங்கில இதழ்களிலும் 'இந்த நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி எது?' என்று கேள்வியைக் கிளப்பி 'அணு'வின் வளர்ச்சியா இது முக்கியமல்ல, பெண்கள் சமத்துவம் வளர்ந்து வருகிறதே இதுவா? இதுவும் அல்ல, பொதுவுடமைச் சமுதாயம் படைக்கும் எண்ணம் எங்கும் உருவாகி வருகிறதே அதா? அல்ல! இந்தியாவின் ராமராஜ்ய தத்துவத்தின் ஆத்மீகம்தான் பெரிது பெரிது" என்று எழுதி சபாஷ் பட்டம் பெறுகிறார்!

'இதோ ரஷ்யாவில் தமிழ்இலக்கியம் பாரீர்' என்று கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னைக் கிளை எடுத்துக் காட்டிற்று! அப்படியா என்று ஆச்சரியப்பட்டோம்! நாம் விரும்பும் நாட்டிற்கு கண்டிப்பாக நமது இலக்கியம் தெரிய வேண்டும், நமது கலாச்சாரம் தெரிய வேண்டும் என்று ஆசைப்பட்டு என்ன இலக்கியத்தை அங்கு மொழி பெயர்த்திருக்கிறார்கள் என்று பார்த்தபோது 'பக்' கென்றது நமது உள்ளம்! ஆமாம்! இங்கேயுள்ள அவமானச் சின்னத்தை, களங்கத்தைத்தான் அங்கும் மொழி பெயர்க்க வழி செய்து விட்டனர்! இங்கு களங்கம் எனக் கருதப்பட்ட இராமாயணமும், மகாபாரதமும் நமது பண்பைக் காட்டும் இலக்கியமாக பொதுவுடமை நாட்டிற்கும் கப்பலேற்றப்பட்டு விட்டது!

அன்றிலிருந்து 'சென்னைக்கிளை' கம்ப இராமாயணத்திலே பொதுவுடமையே இருப்பதாக 'ஜால்ரா' தட்ட ஆரம்பித்து விட்டது!

களங்கத்தைக் களைய வேண்டும் என்று கருதிக் கொண்டிருக்கும்போதே—ஆபாசக் கதைகள் அடுப்பிற்குள் புகும் நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் போதே சிலர் வேண்டுமென்றே விபீடணத் தனத்தைக் காட்டி வருகின்றனர்' ஆச்சாரியார் கூறுவதிலே அர்த்தம் உண்டு. ஆனால் தோழர் ஜீவானந்தம் அதற்குத் தாசராவதுதான் வேடிக்கையாயிருக்கிறது. இத்தோடு நின்றிருக்கிறதா?

வெந்தப் புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல மீண்டும் வேதனை தரும் போக்கைக் கையாண்டு வருகிறது டில்லி. அவ்வடவராட்சியின் ஆணைகண்டு வாய்மூடி மௌனியா யிருக்கும் சென்னை அரசாங்கத்தின்நிலை

சிறுகதை

வாழ்வே தொல்லையா?

கதிரன்

நண்பகல்; படை பதைக்கிற வெயிலில் வெளியே புறப்படுவதற்கு பறவையினங்கள் கூட அடங்கியிருந்தன. ஆனால் அவள் மட்டும் எதையும் லட்சியம் செய்யாது—பொருட்படுத்தாது நடந்துக் கொண்டிருந்தாள். தூசி படிந்த மெய்யைச் சுற்றிக் கணக்கற்ற கிழிச்சல்கள் கொண்ட ஒரு புடவை; அதைப் புடவையென்று அந்தகனும் கூறத் துணியான். ஏதோ ஓர் கந்தல் துணியை மானத்தை மறைக்க உடம்பின் மீது அணிந்திருந்தாள். கையிலே தகரக்குவளை, கண்களிலே சோகம்; நடையிலே வேகம். பட்டினி கிடந்துகிடந்து பஞ்சடைந்துப் போயிருந்த அந்தக் கண்கள் எண்ணற்ற துன்பக் கதைகள் சொல்லும் போலும்!

தெருக்கோடியில் ஒரு பங்களா அவள் அதன்முன் போய் நின்று கொண்டு தன்னுடைய வழக்கம் போல் கேட்க ஆரம்பித்தாள். 'அம்மா தாயே பிச்சை போடுங்க' என்று ஒரு முறை கத்தினாள், இரண்டுமுறை கத்தினாள், மூன்றாவது முறையும் கத்தினாள். உடனே 'சீ' இதென்ன தொல்லை. கத்திக் கத்தி என் தூக்கத்தைக் கலைக்கிறாளே காதகி. போ சனியனே' என்று அலறினார், அந்த வீட்டுப் பெரிய மனிதர்! அவர் பெரிய சீர்திருத்தவாதி, பரந்த கண்ணோட்டக்காரர். 'தனியொருவனுக் குணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று மேடைமீது கர்ஜிப்பவர், 'இரந்துமுயிர் வாழ்தல் வேண்டிற் பரந்துக் கெடுக உலகியற்றி யான்' என்ற குறளுக்கு விளக்கவுரையாக பத்தி பத்தியாக பத்திரிகைகள் பலவற்றிலே கட்டுரைகள் வரைந்தவர்தாம். தியாகிதானென்றாலும் அவர் தம் பகல் தூக்கம் கெடுமளவிற்குத் தொல்லை தர ஒரு ஏழைப் பெண் துணிந்தால் அவருக்குக் கோபம் வருவது நியாயம்தானே! ஏழைகண்ணீர்பார்க்க அஞ்சி அவர் அவளை விரட்டினார் என்று கூட வைத்துக்கொள்ளலாமன்றோ!

'ஏண்டி இப்படிப் பன்னண்டு மணி வெய்யல்லே வந்து பிராணனை வாங்கறே? போறயா, இல்லையா?' என்று விரட்டினாள் அந்த வீட்டு அம்மாமி. 'பெண்கள் இளகிய இதயம் படைத்தவர்கள், கருணையே உருவானர்கள்' என்று கவிகள் வர்ணிக்கிறார்கள், அதனால்தான் போலும் பிச்சை கேட்பவர்களும் 'அம்மா, தாயே' என்று பெண்களையே கூவியழைக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கூட அந்த நண்பகலிலே அவள் மீது ஏனோ இரக்கமும் தோன்றவில்லை' அந்த பங்களாவில் மட்டுமல்ல வேறு வீடுகளிலும் அவளுக்குக் கடுமொழிகளும் வசவுகளும் கிடைத்தனவேயொழிய அந்தத் தகரக் குவளையில் மனமிரங்கி ஒரு பிடி சோறு போடுபவர் ஒருவருமில்லை.

அஞ்சுகம்—எண்ணற்ற துன்பக் கதைகள் சொல்லிடும் கண்கள் படைத்த அக்காரிகையின் பெயரேதான்—ஒரு காலத்தில் நல்ல நிலைமையில்இருந்தவளே. குடியும் குடித்தனமாய் வாழ்ந்த அணங்கு காலவேகத்தில் கணவனை இழந்து தன்னந்தனியாக விடப்பட்டாள். தன் சின்னஞ் சிறு சிசுவைக் காப்பாற்ற படாதபாடு பட்டாள். மற்றவர் விஷயங்களில் வேண்டாத போது அனாவசியமாகத் தலையிடும் சமூகமும் உற்றாரும், பெற்றோரற்ற அவள், உதவியை வேண்டி நின்றபோது கைவிட்டனர். 'உலக்கை போல் இருக்கிறாய், வேலை செய்து பிழைப்பது தானே' என்று வாய் கூசாமல் கூறிய நல்லவர்கள் அவளுக்கு வேலை கொடுக்க மட்டும் மறுத்தனர். தப்பித்தவறி வேலைகிடைத்த இடங்களை அவள் விட்டு வர வேண்டியதாயிற்று. அவளுடைய ஆதரவற்ற நிலையைக் கண்ட அவ்வீட்டு ஆண்கள் அவளிடம் ஒருமாதிரியாக நடந்து கொள்ள ஆரம்பித்தால் கற்பைப் பேரணிகலனாக மதித்துக் காப்பாற்றிய அவள் அவ்விடங்களில் எவ்வாறு இருக்க முடியும்?

தன் பச்சைப் பாலகனுக்கு ஒரு வாய்க் கஞ்சி கொடுக்க முடியவில்லையே என்று அவள் பெற்ற மனப் பதறியது. வாழ்விலே அவள் பற்று வைப்பதற்குக் காரணமாயிருந்த சத்தான அத்தானின் பிரதிபிம்பமும் மணந்தவன் மாண்ட மறு மாதமே இவ்வுலகை விட்டுப் பிரிந்தது. அவள் கதறினாள் கண்ணீரை ஆறாகப்பொழிந்தாள்; உணர்வின்றி தெருக்களில் திரிந்தாள். நாசகார சமூகம் அவளைப் பைத்தியம் என்ற செல்லப் பெயரிட்டழைத்தது. சிறுவர்கள் அவளைக் கற்களால் அடித்து மகிழ்ந்தனர் அவள் உடலிலிருந்து சிந்திய ஒவ்வொரு துளி ரத்தமும் அவள் இருதயத்திலிருந்து வந்தது என்பதை சிறுவர் மட்டுமன்றி பெரியவர்களும் உணர்ந்தார்களில்லை. பிள்ளைகளைக் கண்டிப்பதை விட்டுப் பேசாதிருந்தனர் பெற்றோர்கள். அவள்மேல் வீசப்பட்ட ஒவ்வொரு கல்லும் உளுத்துப் போன நம் சமூகத்தின் மீது வீசியதாகும் என்பதை அவர்கள் அறிவார்களா?

அவள் நடந்தாள். தன் விதியை நினைத்து நடந்தாள். விதியை நோவதைத் தவிர அவளுக்கு வேறு கதியேது? கால்கள் தளர்ந்து, மெய் சோர்ந்து கீழே விழும் வரையில் நடந்து கொண்டேயிருந்தாள், வாழ்வில் சப்பிட்டுப் போன அவள் ஜீவன் என்று அந்த வாடிக் கருகிய கூட்டை விட்டுப் பிரியுமோ! எந்தச்சாலையோரத்தில், எந்த மரத்தடியில் கவனிப் பாரற்று அனாதையாக அவள் விழுந்திறந்து கிடப்பாளோ!!

உண்ண முடியாமல் உண்டு வயிறு வலியால் வருந்தும் பணக்கார மனிதனுக்கு ஒரு வேளை கஞ்சிக்காக ஏங்கித் துடிக்கும் ஏழைக்கும் எவ்வளவு வித்தியாசம்? என்ன கொடுமை? வாழ்வே தொல்லையா? ஏ சமூகமே! நீ சட்டங்கள் இயற்றுகிறாய். திட்டங்கள் தீட்டுகிறாய். மேடைப் பிரசங்கங்கள் செய்கிறாய், சங்கீத வித்வான்கள் மாநாடு முதல் சலவைத்தொழிலாளர் மாநாடுவரை ஒரே மாநாடு மயமாகக் கூட்டுகிறாய். ஆனால் ஏழை ஏங்கியழுத கண்ணீரை எப்படித் துடைப்பது என்பதை மட்டும் எண்ணிப் பார்ப்பதில்லை. பூதானம் சிரமதானம், ஆத்மதானம் என்றவாறு வரிசையாக தானங்களைப் புதிது புதியதாகப் பிரசாரம் செய்கின்றாய்; ஆனால் பட்டினி கிடந்து மெலிந்து பரிதவிக்கும் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்களின் பசியைப் போக்குவது எப்படி என்பதைச் கண்டு பிடித்தாயா? பேச்சுரிமை, வாக்குரிமை என்று பல உரிமைகளைப் பற்றிப் பேசுகிறாய், எழுதுகிறாய். சமூகத்திலே கண்ணியத்தை இழந்து நொந்து போனவருக்கு ஒரு உரிமையும் கிடையாதா? பிறருக்கு ஒரு கெடுதியும் செய்யாமல், தன் அளவில் வாழ ஆசைப்பட அந்த ஏழைப் பெண்ணிற்கு மட்டும் வாழ உரிமையில்லையா?

—'பர்மா நாடு' 5—9—1955

●

களங்கம் . . . தொடர்ச்சி

நினைக்கவோகோபமும், தாபமும் ஏற்படுகிறது நமக்கு!

ஐக்கிய நாடுகள் கல்வி. விஞ்ஞான, கலாச்சார அமைப்பு இந்திய இலக்கியங்களை ஐரோப்பிய மொழிகளில்மொழிபெயர்க்க இந்திய அரசாங்கத்தைக் கேட்டிருந்ததாம்! அதற்கு டெல்லி தமிழ் இலக்கியத்தில் கம்பராமாயணத்தை ஆங்கிலத்திலும், சிலப்பதிகாரத்தை பிரெஞ்சு மொழியிலும் மொழி பெயர்க்க ஏற்பாடுசெய்து வருகிறதாம்! இதை அறிந்தபோதுதான் நாம் மேலும் வாட்டமுறலானோம்!

சிலப்பதிகாரம் மொழி பெயர்க்கப்படுவதிலே அர்த்தம் உண்டு! வேண்டாத இறைவனின் வல்லமைகளை உள்ளடக்கியதாக இருந்தாலும், தமிழர் பண்பு—கற்பின் இலக்கணம்—வாழ்நெறி முதலியன அங்கே மிளிர்கிறது. ஆனால் கம்ப இராமாயணம் மொழி பெயர்க்கப்படுவதிலேதான் இரட்டிப்பு வேதனையாகிறது! கழறுவதோ கடைக்குண வடவர் பண்பு! இது எப்படி நமது கலாச்சார நூலாக அங்கு மொழிபெயர்க்கப் படுவது? தமிழனுக்கே அவமானத்தை அல்லவா உண்டாக்கும் அது? தமிழ் நாட்டிலே நடமாடும் இந்தச் 'சவம்' ஐரோப்பாவிலே தமிழனின் இலக்கியமாக உலவுமா? முடியாது! கேவலம் இது! நாம்மட்டுமாஇப்படிக் கூறுகிறோம்! அதோ டாக்டர் மா. இராசமாணிக்கனாரும் கூடத்தான் என்[illegible]மைத் தமிழன் எவனும் [illegible]த்தானே கூற முடியும்? [illegible] தமிழில் தமிழ்பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டவை வேறு இல்லை என்றுவது கூற முடியுமா? அகநானூறு, புறநானூறு, கற்றோர் போற்றும் கலித்தொகை, ஐங்குறு நூறு, ஒத்த பதிற்றுப்பத்து பரிபாடல்......அப்பப்ப நீண்டு கொண்டு போகுமே பட்டியல்! இவைகளில் ஒன்றை யேனும் மொழி பெயர்க்காது இராமாயணத்தை ஏன் மொழி பெயர்க்க வேண்டும்?

வடவராட்சிதான் இப்படி முனைந்து விட்டதென்றால் இப்போது பச்சைத் தமிழராட்சி புரியும் சென்னையாவது தட்டிக் கேட்டிருக்கக் கூடாதா? கனம் காமராசர் நம்மவரிடையே ஊடாடி வரும் இக்களங்கத்தை மீண்டும் கப்பலேற்ற நினைக்கிறாரா? சென்னை சர்க்கார் நமது கலாச்சாரத்தை, பண்பை வெளியார் அறிய முயற்சிக்கும் போதாவது நமது உண்மைப் போக்கை அவர்களுக்குக் காட்ட முனையலாகாதா?

"எனவே பெரும்பாலும் தமிழர் பழக்க வழக்கங்களையும், உயர்ந்த நாகரீகத்தையும் சீரிய பண்பாட்டையும் தமிழரசர்களான சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சித் திறனையும் ஒழுக்க மேம்பாட்டையும், போர் வன்மையையும், உள்ளவாறு எடுத்துக் காட்டவல்லவை புறநானூறு, அகநானூறு முதலிய எட்டுத் தொகை நூல்களேயாகும். இந்த எட்டினுள்ளும் தலைசிறந்தது புறநானூறு! ஆதலின் இந்த அரிய நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படின் 1800 ஆண்டுகட்கு முன் வந்த தமிழ் வேந்தர் தமிழ் நாட்டை ஆண்டபொழுது இருந்த தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பை உலகமக்கள் உள்ளவாறு அறிந்து இன்புறுதல் கூடும்' என்று இராசமாணிக்கனார் இது சம்பந்தப்பட்ட அறிக்கையில் அறிவுறுத்தி யிருப்பது போல நாமும் அறைகூவுகிறோம். சிறந்த நல்லிசைத் தமிழ் நூல்களை மொழிபெயர்க்க முற்படுங்கள்! இதற்கு சென்னை சர்க்கார் சிபார்சு செய்யட்டும் என்றும் வேண்டுகிறோம்.

மேலும் இப்படிப்பட்ட தமிழ் நூல்களை மொழிபெயர்க்கும் போது மிகுந்த அக்கரை தேவை! தமிழில் வல்ல திறன் கொண்டோரைக் கொண்டே இத்தகைய இலக்கியங்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டும்! இன்றேல் இலக்கியத்தில் இருக்கும் ரசம்—சாரம் கெட்டுவிடும்.

தமிழ் அறியாதோரையும்—தமிழ்க் கலாச்சாரத்தைப் பிரியாதோரையும், தமிழில் நல்ல தேர்ச்சி யுற்றிராதவரையும் கொண்டு மொழி பெயர்க்கச் செய்ய வேண்டாம்! இப்படிச் செய்து இலக்கியத்தைக் கொலை செய்ய வேண்டாம்!

கனம் காமரர்சர் இதில் கவனம் செலுத்துவாரா? 'களங்கம்' கரையேறுவதைத் தடைசெய்ய, செம்மாப் புலவர்களைக் கொண்டு தமிழ் இலக்கியங்களைச் சிறந்த முறையில் மொழி பெயர்க்கச் செய்ய முனைவாரா? தமிழ்ப் பண்பைப் பாதுகாக்கும் இதிலாவது தகுந்த கவனம் செலுத்துவாரா? பொருத்திருந்து பார்ப்போம்!

●



7

காட்சி 17

இடம்...ஆற்றோரம்.

நிலைமை (மூர்த்தியின் மீது நடனராணி மோக வலை வீசிய அதே நேரத்தில் — காதலனைச் சந்திக்க பதுங்கிப்பதுங்கி வந்த ராஜத்தை முன் இரவைப் போலவே வழிமறிக்கிறன் பலவேசம். மறைவிடத்திலே காமிராவோடு வீரன் நின்றுகொண்டிருக்கிறன்.)

பலவேசம்: பொன் மயிலே! வந்துவிடு. உனக்காகத்தான் காத்திருக்கிறேன். தேன் நிலவை விளக்காதே! பூஞ்சோலையைத் தேடிவந்த புள்ளிமானே! திகட்டாத கற்கண்டே!

ராஜம்: என் வாழ்வுப் பாதைக்கு வேலி போடாதே. போய்விடு...!

ப: வேலியா போடுகிறேன்! புதுப்பாதை காட்டுகிறேன் வா கண்ணே! சொல்லித் தெரிவதில்லை 'அந்தக் கலை'. புண்ணை நெஞ்சுக்குப் புது மருந்து பூசு பெண்ணே! உன்னைத்தான் தேடி வந்தேன்-கண்ணைத்தான் திறந்து பார்—கருணை காட்டு!

ரா: உனது அலங்காரப் பேச்சுக்கள் நீ காட்டும் நாசப் பாதைக்கு என்னை அழைத்துச் சென்று விடாது!

ப: அலங்காரப் பேச்சல்ல அது. என் இதய அடித்தளத்திலிருந்து வெளிப்பிய அன்புப் பேச்சுகள் தான் அவை. நான் உன் அழகுக்கு அடிமையானேன்...நீ என் அன்புக்கு நேசங் காட்டக் கூடாதா?

ரா: யாரோடு நேசம்? மோச முகங்காட்டும் ஓநாயிடம் பாசங் காட்டும் ஆட்டைப் பார்த்திருக்கிறுயா நீ! மூன் காட்டுக்கு அழைக்கிறுயே!

ப: இல்லை—முல்லைத் தோட்டத்துக்கு அழைக்கிறேன், அந்த இன்பக் கொல்லையிலே காதல் சிட்டுகளாகப் பண்பாடித் திரிவோம் வா. சொல்லை நம்பு—சோக சித்திரமாக்காதே என்னை!

ரா: வேதனையின் உருவமாக என்னை ஆக்கி வைத்துவிட்டு வேடிக்கை பேசுகிறுயே—அன்பு பேசுகிறுயே—நீ மனித நீதியையும் தெரிந்திருப்பாயே!

ப: ஆமாம்! நல்ல நீதியைத் தெரிந்துதானிருக்கிறேன்.

ரா: அதைத் தெரிந்துமா இப்படி நடந்து கொள்ளுகிறுய்?

ப: எனக்குச் சேர வேண்டிய புதையலை...பொன் மூட்டையை யாரோ இனந்தெரியாதவன் திருடிச் செல்வதைப் பார்த்துக் கொண்டிருக்க நானென்றும் ஏமாளியல்ல!

ரா: பொன்னுக்காகவா இந்தப் பெண் இதயத்தை அறுக்கிறுய்! பொன் மூட்டைதானே வேண்டுமுனக்கு! பொன்மூட்டையின் முன்னே என்வாழ்வு சாமானியமானதாகத்தானே படுகிறது உனக்கு.

ப: மேனியைப் பொன்னுக்கி வைத்திருக்கும் இந்தப் புதையல் தான் வேண்டும் எனக்கு. திகம்பரரின் மாளிகை மூலையிலே குவிந்திருக்கும் செல்வத்தையல்ல இதோ என் முன்னே நெளிந்தாடும் இந்தப் புதையலைத்தான் விரும்புகிறேன். உன் ஒரே ஒரு வைரச் சிரிப்புக்கு இந்த வையமே ஈடாகாதே!...ராஜம்! என் இதயத்தின் திருவிளக்கே இருண்ட வாழ்விலே புதுஒளி வீசுகண்ணே.

ரா: பாவத்துக்கு விலை பேசுகிறுயே பலவேசம்! என் ஆசைகளை அழித்து விடாதே!......என்னுல் வாழவே முடியாது. காதல் சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து விடாதே!

ப: உன் பார்வை அம்புகள் தான் என் இதயத்தைக் குத்திக் கொலை செய்கின்றனவே. கோமளம்! வாழ்வின் ஜீவனே! குழி விழும் உனது தாமரைக் கன்னம் 'புதையல் இங்கேதானிருக்கிறது- எடுத்துக் கொள்' என்று கட்டளை யிடுகிறது......எடுத்துக் கொள்ளட்டுமா என்னுயிரே!

ரா: தொடாதே நெருப்பாகி விடுவேன் தீ—ஜுவாலை விடும் போது அழகாகத்தானிருக்கிறது ...தொட்டால்?

ப: அந்தத் தீயிலே காதல் குளிர் காய்வோம், வா இன்பமே!

[செந்தாமரைக் கன்னத்தைத் தொட்டுக் கொண்டே ராஜத்தோடு நெருங்கி நிற்கிறன் பலவேசம்......அந்தக் காட்சியை மறைவிலிருந்த வீரன் படமெடுத்து விடுகிறன். பலவேசத்தின் பிடியிலிருந்து விடுபடத் துடிக்கிறுள் ராஜம். அவள் விடுபட்டு விடுகிறுள்... ஆனுல் அவளின் விரலிலிருந்த 'மோதிரம்' மட்டும் பலவேசத்திடம் சிக்கிக் கொள்ளுகிறது.]

*

காட்சி 18

இடம்...கோயிலின் பின்புறம்.

நிலைமை (காமிராவோடு நின்றுகொண்டிருக்கிறன்வீரன் மோதிரத்தை விரலில் மாட்டி அழகு பார்த்துக் கொண்டே பலவேசம் வருகிறுன்)

வீ: படமெடுத்து விட்டேன்— பலவேசம்!

ப: திகம்பரரின் மானமும், அந்தத் துடுக்குக்காரியின் வாழ்வும் இந்தச் சின்னஞ்சிறு பெட்டிக்குள்ளே அடங்கிக் கிடக்கிறதென்று கூறுவீரா! காதலுக்கு விளக்கம் பேசி என் முகத்திலே கரியைப் பூசினுளே அதற்குப் பழி தீர்த்துக் கொள்ளுகிறேன் பார்! இனந்தெரியாத நாடோடியோடு கொஞ்சிக் குலவலாமென ஆசைக் கோட்டைகளெல்லாம்...

வீ: தூள் தூளாகத்தான் போய்விடும். நட்சத்திரம் வானத்தை முத்தமிடும் போது கம்பீரமாகத்தான் தலைதூக்கி நிற்கிறது ...ஆனுல் அறுந்துவிழுந்து தரையைத் தஞ்சமடையும் போது..... பார்ப்பதற்கு பரிதாபமாகத் தானே யிருக்கிறது; இதுதான் இராஜத்தின் நிலை!

ப: மூர்த்திக்கும் அப்படித் தான். காதல் சாம்ராஜ்யத்திலே கீர்த்திக்கொடி பறக்க விடலாமென எண்ணிக்கொண்டிருக்கும் அவனது நம்பிக்கையை நாசமாக்க வேண்டும். அந்த சொகுசுக்காரி எனக்குச் சொந்தமாவதை அவன் காணட்டும்.

[பேசிக்கொண்டே கரத்தை நீட்டுகிறுன் பலவேசம் நீட்டிய —கரத்திலே காமிராவைப் புதைத்து விட்டு வீரன் விடை பெறுகிறுன்.]

*

காட்சி 19.

இடம்: வள்ளியின் வீடு

நிலைமை [வள்ளி ... திருக்கிறுள். வீரன் ... நுழைகிறுன்.

வ: அவர் எங்கே?

வீ: யாரு...பலவேசமா? ஒரு முக்கியமான காரியமாகப் போருனும் அதனுலே.

வ: நம்மைவிட அவருக்கு என்ன முக்கியம். பலவேசம் ஒரு சுத்த அசடு! உன் பேச்சை நம்பி அந்த அப்பாவியைக் கட்டிக்கிட்டு அழுதா சீக்கிரமே நாம் சத்திரத்திலேயோ சாவடியிலேயோ இடம் தேடிக்க வேண்டியது தான்.

வீ: நீ தப்பாக நினைக்கிறுய். பலவேசத்தின் கையிலே புதையல் சிக்கும் நேரமிது நீயாக எதையாவது கற்பனை செய்து வைத்து சந்தர்ப்பத்தைப் புயலாக்கி விடாதே!

வ: இப்போது மட்டும் தென்றலா வீசுகிறது. ஒரு மரகத மாலை கூட வாங்க அவருக்கு மனமில்லை நாமே வேஷம் போட்டு ஆடுகிறோம். நம்மிடமே வேஷம் போடுகிருர் பலவேசம். அந்த வெளி மயக்கை நீ நம்பிவிடுகிறுய் நான் நம்ப மாட்டேன்.

வீ: இப்பேதே அப்படித்தான் கூறுவாய் ஆனுல் நாளை பூக்காட்டுக்கு நீதான் ராணியாகப் போகிறுய். உன் தலையிலே தங்கக் கிரீடத்தைச் சூட்டும் தகுதி படைத்தவன் பலவேசம் ஒருவனேதான். உன் மீது எவ்வளவு பாசம் வைத்திருக்கிறுன். தெரியுமா?

வ: ஆசையும் — பாசமும் எதற்குப் பயன்படுகிறது?......

[விழியிலே கேள்விக்குறியைத் தேக்கிக் கொண்டு சிரிக்கிறுள்.]

*

காட்சி 20

இடம் திகம்பரர் மாளிகை

நிலைமை [இரவின் அமைதியிலே தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்தாள் ராஜம். நித்திரை மோகத்திலே கனவு மாளிகைக்குள்ளே காலடி வைத்தாள்.]

ரா: காத்திருந்த அத்தான்— கல் நெஞ்சர்கள் வலை வீசி விட்டார்களே! பாடிப் பறந்து வந்தேன் என் சிறகுகளை அறுக்கத் துடித்தான் ஒரு படு பாவி! கண்ணீர் ஆற்றிலே நாம் மிதந்துதான் தீரவேண்டுமா?

மூ: ஆம் பூங்கொடி; அந்த ஆற்றைக் கடந்துதான் நமது லட்சிய பூமிக்குச் செல்ல முடியும். இருண்ட காலம் இருண்டே யிருக்காது. ஒளி பிறந்துதான் தீரும் சூதுக்காரர்கள் காலத்தின் சூருவளியிலே சருகாகத்தான் சாய்ந்து போவர்'

ரா: காலச் சூருவளி வீசியடிப்பதற்கு முன்னதாக நாமே காய்ந்த சருகாகி விட்டால்! தேன் விஷமாகி விட்டால்.

மூ: கொஞ்சும் புருவே கொர்த்...

11-ம் பக்கம்

> **எச்சரிக்கை!**
>
> ●
>
> "பாலைவன ரோஜா" நாடக வசனங்களையோ, சம்பவங்களையோ பயன் படுத்த எண்ணுவோர் — முன்னதாகவே அனுமதி பெற வேண்டும். அனுமதிபெருமல் பயன்படுத்த முயற்சிப்போர் மீது சட்டத் துணையோடு நடவடிக்கை எடுக்க ஏதுவாகுமென்பதை முன்னதாகவே எச்சரிக்கிறோம்.
>
> —மா. த.

மா. தங்கவேலர்

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 16, [illegible] ரைஸ்மில் தெரு, சென்னை-1